
# தினபூமி

thinaboomi.com

பூமி: 24 சுற்று: 18 மார்கழி 04

புதுச்சேரி, வெள்ளி, டிசம்பர் 19, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**அமெரிக்க படை வீரர்களுக்கு தலா ரூ.1.60 லட்சம் கிறிஸ்துமஸ் பரிசு: அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு**

....2-ம் பக்கம்

**அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஏ.ஐ. முறையில் சுங்க கட்டணம் வசூல்: மத்திய அமைச்சர் கட்காரி தகவல்**

....3-ம் பக்கம்

**ஐ.பி.எல். 2026-சீசன்: சி.எஸ்.கே. அணியில் மொத்தம் 25 வீரர்கள்**

....6-ம் பக்கம்






● முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச்செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் 718 கோடி ரூபாய் முதலீட்டில் 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஷ்னைடர் (எஸ்.இ.ஐ.பி.எல்.) நிறுவனத்தின் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் ஷ்னைடர் நிறுவனத்தின் மின்கலன்கள் மற்றும் குளிர்விப்பு தீர்வுகளுக்கான புதிய ஆலை அமைக்கும் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தேசிய கிராமப்புற வேலை திட்டத்திற்கு மாற்றான

# புதிய சட்ட முன்வடிவை செயல்படுத்த வேண்டாம்

*** பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்**
*** கிராமப்புற தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும்**

சென்னை, டிச. 19-

**மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை திட்டத்திற்கு மாற்றான விபி-ஜி ராம்ஜி சட்ட முன்வடிவை செயல்படுத்த வேண்டாம் என்று பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். மேலும் இந்த புதிய சட்ட முன்வடிவால் மாநிலங்களின் நிதியையும், நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான ஏழை கிராமப்புறத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாகப் பாதிக்கும் என்றும் தனது கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.**

**கடும் எதிர்ப்பு....**

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி சட்டத்தை ரத்து செய்து அதற்கு பதிலாக விபி-ஜி ராம்ஜி என்ற புதிய சட்டமுன்வடிவை கொண்டுவருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம், 2005-ஐ ரத்து செய்து, அதற்குப் பதிலாக விபி-ஜி ராம்ஜி 2025 சட்டமுன்வடிவினை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியதற்கு தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த கவலையையும் கடுமையான எதிர்ப்பையும் தெரிவிப்பதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**மிக முக்கிய பங்கு....**

2005-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உருவாக்கச் சட்டமானது இந்தியாவின் கிராமப்புற வாழ்வாதார பாதுகாப்பில் ஒரு மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், இது வேலை வாய்ப்பை வழங்கும் உத்தரவாதத்தை கோடிக்கணக்கான கிராமப்புற குடும்பங்களுக்கு வழங்குவதாக குறிப்பிட்டுள்ள முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில், இந்தத் திட்டம் 2006 முதல் செயல்படுத்தப்பட்டு, ஆண்டிற்கு சராசரியாக 30 கோடி மனித-வேலை நாட்கள் வேலைவாய்ப்பை உருவாக்கி, சுமார் 12,000 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். 2021-22 முதல் 2024-25ஆம் ஆண்டுவரை, சராசரியாக 30 கோடி மனித வேலைநாட்கள் வேலையை வழங்கியுள்ளதாகவும், 2023-24 ஆண்டில் மட்டும் 40.87 கோடி மனிதநாட்கள் உருவாக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு 13,400 கோடி ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**வருமானத்திற்கு ஆதாரம்....**

பாசனத்திற்கு ஜீவ நதிகள் இல்லாத பகுதிகளிலும், விவசாயப் பகுதிகளில் மழை குறைவாக பெய்யும் காலங்களிலும், பட்டியல் இன மக்கள் உட்பட பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு இத்தகைய வேலை முறையே வருமானத்திற்கு முக்கிய ஆதாரமாக இருந்து வருகிறது என்று தனது கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த சட்டமுன்வடிவில் உத்தரவாத வேலை வாய்ப்பை ஆண்டுக்கு 125 நாட்களாக அதிகரித்திருப்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக இருந்தாலும், அதன் மற்ற விதிகள் இந்தத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை பலவீனப்படுத்துவதாக

(கடைசி பக்கம் பார்க்க)

### மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்

# வேலை நாள் 125 நாட்கள் என்பது ஏமாற்று வேலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டம்

சென்னை, டிச. 19-

**மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் வேலை நாள் 125 நாட்கள் என்பது ஏமாற்று வேலையே என தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய அரசை குளிர்விக்க ஏழைகள் வயிற்றில் அடிக்கும் திட்டத்திற்கு ஒத்து ஊதுகிறார் இ.பி.எஸ். என்று கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:- ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது மத்திய பா.ஜ.க.; அதற்கு ஒத்து ஊதுகிறார் திருவாளர் பழனிசாமி. விபி-ஜி ராம்ஜி திட்டத்தில் 125 நாட்கள் வேலை என்பது ஏமாற்று வேலையே.

100 நாட்கள் வேலை உத்தரவாதம் என்று சட்டம் இருந்தபோதே, பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு 20 முதல் 25 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்தது. அதற்கான ஊதியத் தொகையையும் திட்டச் செலவையும் மாதக் கணக்கில் விடுவிக்காமல் வஞ்சித்தனர். அந்த நிலுவைத் தொகையையும் நாம் போராடிப் பெற வேண்டிய அவலம் தான் இருந்தது.

தற்போது, மத்திய அரசின் விருப்பத்தின் பேரில் அதிகாரிகள் விரும்பினால் வேலை வழங்கலாம் என்று விதிகள் மாற்றப்பட்ட பிறகு, ஓரிரு நாட்கள் வேலை கிடைப்பதே அரிதாகப் போகிறது. நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பைச் சந்திக்கப் போகிறது. திட்டச் செலவில் 40 சதவீதம் தொகையை மாநிலங்கள் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை, ஜி.எஸ்.டி. வரி மாற்றங்களுக்குப் பிறகு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மாநில அரசுகளுக்குத் தரப்படும் சுமை தண்டனை!

கிராமப்புறப் பெண்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றி வந்த மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்துக்கு மூடுவிழா நடத்துவதற்குத் திருவாளர் பழனிசாமி அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே

# விபி-ஜி ராம்ஜி மசோதா பார்லி., மக்களவையில் நிறைவேற்றம்

புதுடெல்லி, டிச. 18-

**எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு மாற்றான விபி-ஜி ராம்ஜி மசோதா நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.**

கிராமப்புற வேலை வாய்ப்புக்காக கடந்த 2005-ம் ஆண்டு, 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்' கொண்டுவரப்பட்டது. அதில், தகுதியுள்ள ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் வேலை அளிக்கப்படுகிறது. இது, 100 நாள் வேலைத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இதற்கிடையே, இத்திட்டத்தை நீக்கிவிட்டு, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையுடன் கிராமப்புற வேலைவாய்ப்பை பிணைக்கும்வகையில், வேலைவாய்ப்புக்கான வளர்ச்சியடைந்த பாரத உத்தரவாத திட்டம் கொண்டு வரப்படுகிறது.

**மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதால், 100 நாட்கள் வேலை என்பது, 125 ஆக உயர்த்தப்படுகிறது. மேலும், மத்திய அரசின் நிதி பங்களிப்பிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது மத்திய அரசு சார்பில் 60 சதவீதம் நிதி வழங்கப்படும். மாநில அரசுகள் 40 சதவீத நிதி பங்களிப்பை அளிக்க வேண்டும். முன்னதாக 90 சதவீதம் வழங்கப்பட்ட நிலையில், இனி நிதி குறைவாக வழங்கப்படும்.**

அதன்படி, விக்சித் பாரத் ரோஜ்கர்-அஜீவிகா மிஷன் (கிராமின்) அதாவது ஊரக வேலைத்திட்டம் மசோதாவை மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் மக்களவையில் அறிமுகம் செய்தார். இதற்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்புக் குரலை பலமாக எழுப்பினர். இதற்கிடையே குரல் வாக்கெடுப்பின் மூலம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை ஒத்திவைக்கப்பட்டது. மேலும் இந்த மசோதா குறித்து மத்திய வேளாண்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் நேற்று பதில் அளித்தார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு மாற்றான விபி-ஜி ராம்ஜி மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதனை சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். அப்போது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சபாநாயகர் இருக்கைக்கு முன்வந்து முற்றுகையிட்டனர். இதனால் மக்களைவை நாள் முழுவதும் ஒத்திவைத்து சபாநாயகர் உத்தரவிட்டார். இன்று காலை 11 மணிக்கு மக்களைவை மீண்டும் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டு விடுமுறைக்குப் பிறகு இலவச லேப்டாப் வழங்கப்படும்

## துணை முதல்வர் உதயநிதி தகவல்

சென்னை, டிச. 19-

**புத்தாண்டு விடுமுறை முடிந்து மாணவர்கள் கல்லூரிக்கு வந்தவுடன் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தகவல் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கல்லூரி மாணவர்களுக்கான மடிக்கணினி திட்டத்தை முடக்க நினைக்கும் எடப்பாடியின் கனவு பலிக்காது. தமிழ்நாட்டில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு இப்போது ஏன் லேப்டாப் கொடுக்கிறீர்கள் என்ற கேள்வியை திடீர் 'கணினி நிபுணர்' எடப்பாடி பழனிசாமி எழுப்பி இருக்கிறார்.

இன்னும் சில வாரங்களில் நம் மாணவர்கள் கரங்களுக்கு மடிக்கணினிகள் சென்று சேரவுள்ள நிலையில், இந்தக் கேள்வியை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பியுள்ள நோக்கம் என்ன என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும், மாணவர்களுக்கும் நன்றாகத் தெரியும். தன்னுடைய குறுகிய அரசியல் லாபத்திற்காக, கல்லூரி மாணவர்கள் பயன்பெற இருக்கும் ஒரு திட்டத்துக்கு எதிராக அவதூறுகளைப் பரப்ப வேண்டும் என்பதே அவருடைய எண்ணம். தமிழ்நாட்டு மாணவர்கள் படித்து முன்னேறிவிடக் கூடாது என்ற பாசிச பா.ஜ.க.வின் எண்ணத்தை, அவர்களின் வழிகாட்டுதலின் படி எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார்.

ஏற்கனவே அறநிலையத் துறை நிதியில் கல்லூரி ஆரம்பிக்கலாமா என்று கேட்டு, தமிழ்நாட்டு மக்களிடமும் – மாணவர்களிடமும் வாங்கிக் கட்டிக் கொண்ட எடப்பாடி பழனிசாமி, இப்போது, "கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஆண்டின் நடுவில் ஏன் லேப்டாப் கொடுக்கிறீர்கள்," என்கிறார். கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் கிடைப்பதை வரவேற்கும் பரந்த மனப்பான்மைகூட இல்லாத எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, இந்தத் திட்டத்தை எப்படியாவது சீர்குலைத்து விட முடியாதா என்று முயற்சிக்கிறார்.

ஆனால், முதல்வர் தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு நிச்சயமாக கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கத்தான் போகிறது. இதை எடப்பாடி பழனிசாமி அல்ல, அவர்களது டெல்லி ஓனர்கள் நினைத்தாலும் தடுக்க முடியாது. ஏதோ தேர்தலுக்காக திடீரென லேப்டாப் கொடுக்கப்படுகிறது போன்ற ஒரு பொய் பிம்பத்தை ஏற்படுத்த எடப்பாடி பழனிசாமி முயல்கிறார். 2025-2026 நிதிநிலை கூட்டத்தொடரின் போதே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டது. அதாவது, "20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும்" என்று தெளிவாக நிதி நிலை அறிக்கையில் உள்ளது.

அந்த நிதிநிலை அறிக்கை அவருக்கும் வழங்கப்பட்டு இருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் அதை படித்துப் பார்த்தாரா, இல்லை, வழக்கம்போல வீட்டிலேயே வைத்துவிட்டாரா என்பது அவருக்கே வெளிச்சம். லேப்டாப் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு, லேப்டாப் வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும், எடப்பாடி பழனிசாமி தன்னுடைய அறிக்கையில், "இன்றைய ஏஐ காலத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு இவர்கள் தரும் லேப்டாப் இருக்கிறதா? என்றால் அதுவும் இல்லை" என்று சொல்லியிருக்கிறார். நான் இதுவரை எடப்பாடி பழனிசாமியை சேக்கிழார் எழுதிய கம்ப இராமாயணத்தைப் படித்த தமிழ்ப் புலவர் என்று மட்டும்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

அவர் தமிழ்ப் புலவர் மட்டுமல்ல. அவர் சிறந்த கணினி நிபுணர் என்பதும் இப்போது தான் தெரிந்தது. அரசின் லேப்டாப் மாணவர்களின் கரங்களுக்கு இனி தான் சென்ற சேர இருக்கிறது. அதற்குள்ளாக, நம்முடைய 'கணினி நிபுணர்' எடப்பாடி பழனிசாமி, லேப்டாப்பில் தொழில்நுட்பம் போதவில்லை – கட்டமைப்பு சரி இல்லை என்று கதைவிடுகிறார். கல்லூரி மாணவர்களுக்கு பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவுக்கு ஏற்றவாறு, அதிவேக பிராசசர் மற்றும் நீண்டநேரம் தாங்கும் பேட்டரி(Battery) என அத்தனை நவீன தொழில்நுட்பங்களுடன் இந்த லேப்டாப் இருக்கிறது.

அமெரிக்காவின் பெர்பிளெக்ஸிட்டி நிறுவனத்தோடு எல்காட் நிறுவனம் ஒரு சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. அதன்படி 6 மாத காலத்திற்கு பெர்பிளெக்ஸிட்டி புரோ ஏஐ வசதி கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது. இப்படி தரம், தொழில்நுட்பம், வசதி என அனைத்திலும் சிறப்பாக இருக்கக்கூடிய மடிக்கணினிகளை கல்லூரி மாணவர்களுக்கு நம் அரசு வழங்க இருக்கிறது. எனவே, மாணவர்களுடைய கல்வி கனவை எப்படி சிதைக்கலாம் என்று சிந்திப்பதை விட்டுவிட்டு, எடப்பாடி பழனிசாமி வேறு ஏதாவது ஆக்கப்பூர்வமான அரசியல் பணிகளை செய்தால் நன்றாக இருக்கும் என அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியாகிறது

## பெயர் இல்லாதவர்கள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

சென்னை, டிச. 19-

**தமிழகத்தில் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. சுமார் 97 லட்சம் பேர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ள நிலையில் பெயர் இல்லாதவர்கள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்றும் வாக்காளர் விண்ணப்ப படிவம் 6-யை பெற்று அதை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். ஜனவரி 18-ம் தேதி வரை ஆட்சேபங்கள் இருந்தால் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர்., எனப்படும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணியை, தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. இதன்படி, முதல் கட்டமாக வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் துவங்கியது. இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 6 கோடியே 41 லட்சம் வாக்காளர்களுக்கும் வீடு வீடாக சென்று கணக்கீட்டு படிவங்களை கடந்த நவம்பர் 4-ம் தேதி முதல் வழங்கி வந்தனர். இந்த கணக்கீட்டு படிவங்களை நிரப்பி சமர்பிப்பதற்கான கால அவகாசம் டிசம்பர் 14-ம் தேதியுடன் நிறைவடைந்தது.


இந்நிலையில், இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 97 லட்சம் பேர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி, 26.90 லட்சம் பேர் இறந்தவர்கள், 13.60 லட்சம் பேர் கண்டுபிடிக்கப்பட முடியாதவர்கள் அல்லது ஆப்செண்ட் ஆனவர்கள், 52.60 லட்சம் பேர் நிரந்தரமாக இடம் மாறிச் சென்றவர்கள், 3.98 லட்சம் இரட்டை பதிவுகள் என்று மொத்தம் 97.40 லட்சம் பேர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்

(கடைசி பக்கம் பார்க்க)


தினபூமி, டிசம்பர் 19, 2025
thinaboomi.com

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -77.84 | -3.00 |
| பாயிண்ட் 84,481.81 | பாயிண்ட் 25,815.55 |



**தங்கம்** 1 சவரன் ₹99,520 — 1 கிராம் ₹12,440



**வெள்ளி** 1 கிலோ ₹224,000 — 1 கிராம் ₹224.00

**டாலர்** ₹90.18

**பெட்ரோல்** ₹100.75 — **டீசல்** ₹92.34

# அமெரிக்க படை வீரர்களுக்கு தலா ரூ.1.60 லட்சம் கிறிஸ்துமஸ் பரிசு

## அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

**நியூயார்க், டிச. 19-**

அமெரிக்காவின் பாதுகாப்புப் படை வீரர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசாக தலா ரூ. 1.60 லட்சம் வழங்கப்படும் என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சேவை மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையில், 'வீரர்களுக்கான ஈவுத்தொகை' வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க மக்களுக்கு புதன்கிழமை அதிபர் ட்ரம்ப் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:

"நான் பதவிக்கு வந்த முதல் நாளிலேயே, நாட்டின் தெற்கு எல்லையில் நடந்த ஊடுருவலைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுத்தேன். கடந்த ஏழு மாதங்களாக, ஒரு வெளிநாட்டினர் கூட சட்டவிரோத நமது நாட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை. இது முற்றிலும் சாத்தியமற்றது என்று அனைவரும் கூறிய ஒரு சாதனையாகும்.



நான் அமெரிக்காவின் வலிமையை மீட்டெடுத்துள்ளேன். 10 மாதங்களில் 8 போர்களை முடிவுக்குக் கொண்டுவந்தேன், ஈரானின் அணுசக்தி அச்சுறுத்தலை அழித்தேன், காஸா போரை முடிவுக்குக் கொண்டுவந்தேன். இதனால், 3000 ஆண்டுகளில் முதல்முறையாக மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தியுள்ளேன். மேலும் உயிருடனும் பிணமாகவும் இருந்த அனைத்து பணயக் கைதிகளையும் விடுவித்தேன்.

ஏற்கெனவே, அமெரிக்காவில் 18 டிரில்லியன் டாலர் முதலீட்டை நான் ஈர்த்துள்ளேன். இதன்பொருள், வேலைவாய்ப்புகள், ஊதிய உயர்வுகள், வளர்ச்சி, தொழிற்சாலைகள் திறப்பு மற்றும் மிகச் சிறந்த தேசிய பாதுகாப்பு ஆகும். இந்த வெற்றியின் பெரும்பகுதி வரிகளின் மூலம் சாதிக்கப் பட்டுள்ளது. எனக்கு மிகவும் பிடித்த வார்த்தை - வரிகள். பல தசாப்தங்களாக மற்ற நாடுகள் நமக்கு எதிராக இதை வெற்றிகரமாகப் பயன்படுத்தி வந்தன. ஆனால் இனி அது நடக்காது. அமெரிக்காவில் நிறுவனங்களைக் கட்டினால் வரிகள் இல்லை என்பதை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால், நாம் இதுவரை கண்டிராத அளவில் தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் அமெரிக்காவில் அவர்கள் கட்டி வருகின்றனர்.

14,50,000-க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்களுக்கு கிறிஸ்துமஸுக்கு முன்பாக சிறப்புப் போர்வீரர் ஈவுத்தொகை வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். 1776-ல் நமது தேசம் நிறுவப்பட்டதைக் கௌரவிக்கும் விதமாக, ஒவ்வொரு வீரருக்கும் 1,776 டாலர்களை (இந்திய மதிப்பின்படி ரூ. 1.60 லட்சம்) வழங்கவுள்ளோம்." எனத் தெரிவித்துள்ளார்.

# ஈரோட்டில் பிரச்சாரத்தின் போது கம்பத்தில் ஏறிய ரசிகரை கண்டித்த விஜய்

**ஈரோடு, டிச. 19-**

ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் அருகே தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு நடிகர் விஜய் உரையாற்றினார். கரூர் கூட்ட நெரிசலுக்குப் பிறகு முதல்முறையாக தமிழகத்தில் கூட்டம் நடைபெறுவதால், த.வெ.க. கட்சி மற்றும் காவல்துறை தரப்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிந்தன.

இந்த நிலையில், விஜய் பேசிக் கொண்டிருக்கும்போது அங்கிருந்த உயரமான கம்பம் ஒன்றில் த.வெ.க. தொண்டர் ஒருவர் ஏறியதால், தனது பேச்சை நிறுத்து அவரை இறங்குமாறு விஜய் வலியுறுத்தினார். தொடர்ந்து அவர் கம்பத்தில் இருந்து இறங்கும்வரை விஜய் தனது பேச்சை தொடரவில்லை. அவர் கம்பத்தில் இருந்து இறங்கியவுடன் வாகனத்தில் நின்றவாறு அவருக்கு முத்தம் கொடுத்தார்.

### சட்டவிரோதமாக கடல் வழியாக

# இந்திய எல்லைக்குள் நுழைந்த 35 வங்கதேச மீனவர்கள் கைது

**புதுடெல்லி, டிச. 19-**

இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன் பிடித்ததாக வங்கதேச மீனவர்கள் 35 பேரை இந்திய கடலோர காவல்படை கைது செய்துள்ளது.

இதுதொடர்பாக காவல்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: வங்காள விரிகுடாவில் புதன்கிழமை காலை சந்தேகத்திற்கிடமான இரண்டு இழுவை படகுகளை இந்திய கடலோர காவல்படையினர் கண்டுள்ளனர். இதையடுத்து, உடனடியாக அங்கு சென்ற கடலோர காவல்படையினர் இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாக வங்கதேச மீனவர்கள் 35 பேரையும், அவர்களது இரண்டு மீன்பிடிப் படகுகளையும் சிறைப்பிடித்து ஃப்ரேசர்கஞ்ச் மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டு வந்தனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பிறகு அவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர். மீனவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் வியாழக்கிழமை பிற்பகல் காக்ட்விப் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

### ஈரோடு பொதுக்கூட்டத்தில்

# தொண்டர்களுடன் எடுத்த செல்பி வீடியோவை வெளியிட்ட விஜய்..!



**ஈரோடு, டிச. 19-**

ஈரோடு பிரச்சாரத்தில் தொண்டர்களுடன் எடுத்த செல்பி வீடியோவை விஜய், தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் "நன்றி ஈரோடு" என்று பதிவிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

ஈரோட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய், ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்கு மத்தியில் உரையாற்றினார். ஈரோடு அருகே விஜயமங்கலம் சரளையில் த.வெ.க. சார்பில் மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக 16 ஏக்கர் பரப்பளவில் பொதுக்கூட்ட மைதானம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டது. பொதுக்கூட்டம் நடைபெறும் மைதானத்துக்கு வந்த விஜய்க்கு, வழிநெடுக த.வெ.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்த பொதுக்கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய், ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்கு மத்தியில் உரையாற்றினார். ஆவேசமாக பேசிய விஜய், தனது உரையை முடித்ததும் பிரசார வாகனத்தில் இருந்தபடியே தொண்டர்களுடன் செல்பி வீடியோ எடுத்தார். தொடர்ந்து அவருக்கு த.வெ.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் வெள்ளி செங்கோல் வழங்கி கவுரவித்தார். இந்த நிலையில் தொண்டர்களுடன் எடுத்த செல்பி வீடியோவை விஜய், தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் "நன்றி ஈரோடு" என்று பதிவிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# வங்கதேசத்தில் இந்திய விசா மையம் மூடல்

**டாக்கா, டிச. 19-**

வங்கதேசத் தலைநகர் டாக்காவில் உள்ள இந்திய விசா விண்ணப்ப மையம் பாதுகாப்பு காரணங்களுக்காக தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்காவில் உள்ள ஜமுனா ஃபியூச்சர் பார்க் வளாகத்தில் இயங்கி வரும் இந்திய விசா விண்ணப்ப மையம், நேற்று முன்தினம் மதியம் 2 மணி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது. வங்கதேசத்தில் உள்ள சில கிளர்ச்சியாளர்கள் இந்திய தூதரகத்தை நோக்கி பேரணி நடத்த முயன்றதாலும், அந்நாட்டில் சில தலைவர்கள் பொதுவெளியில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை பேசி வருவதாலும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கதேசத்தில் உள்ள இந்திய தூதரகப் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று அந்நாட்டு இடைக்கால அரசிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வங்கதேச உயர் ஆணையருக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் சம்மன் அனுப்பி தனது கவலையைத் தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கும் வங்கதேச மக்களுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க நட்புறவை வலுப்படுத்தவே இந்தியா முன்னுரிமை அளிக்கும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

# ஜனவரி 24-ம் தேதி தி.மு.க.வின் 2-வது இளைஞரணி மாநாடு

**சென்னை, டிச. 19-**

தி.மு.க.வில் சட்டமன்ற தேர்தல் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. தேர்தலையொட்டி பல்வேறு அணிகளின் செயல்பாடுகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. தி.மு.க. இளைஞர் அணியில் தமிழகம் முழுவதும் 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்திற்கும் மேற்பட்ட உறப்பினர்கள் உள்ளனர்.

இதில் உள்ள 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம் தோறும் நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு நடத்த தி.மு.க. தலைவர் முதல்வர்மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு திருவண்ணாமலையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 2-வது மாநாட்டை நடத்த தி.மு.க. இளைஞரணி முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில், தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கான தி.மு.க. இளைஞரணி மாநாடு ஜனவரி 24-ந்தேதி நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது. 2-வது மண்டல மாநாடு தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளதாக கூறப்படுகிறது.

# ஒரு சவரன் தங்கத்தின் விலை ரூ.1 லட்சத்தை நெருங்குகிறது

## வெள்ளி விலை புதிய உச்சம்

**சென்னை, டிச. 19-**

தங்கம் விலை நேற்று மீண்டும் அதிகரித்து விற்பனையானது. ஒரு கிராம் தங்கம் ரூ.12,440-க்கும், சவரன் ரூ.99,520-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை வரலாறு காணாத வகையில் மேலும் உயர்ந்துள்ளது. ஒரு கிராம் ரூ.224-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

தங்கம் விலை மீண்டும் கட்டுக்கடங்காமல் ஏறத் தொடங்கியது. கடந்த 12-ம் தேதியில் இருந்து அதன் விலை தாறுமாறாக ஏற்றம் கண்டது. கடந்த 11-ம் தேதி ஒரு சவரன் ரூ.96,400 என்று இருந்த நிலையில், 12-ம் தேதி ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,560 உயர்ந்து ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கு விற்பனை ஆனது.

இதன் தொடர்ச்சியாக கடந்த 15-ம் தேதி மட்டும் சவரனுக்கு ரூ.1,160 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 120-க்கு விற்றது. இதன் மூலம் தங்கம் இமாலய உச்சத்தை தொட்டது. இதன் தொடர்ச்சியாக கடந்த 3 நாட்களுக்கு முன் சவரனுக்கு ரூ.1,320 குறைந்து, ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 350-க்கும், ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 800-க்கும் விற்பனை ஆனது.

நேற்று முன்தினம் நிலவரப்படி, மீண்டும் தங்கம் விலை உயர்ந்து இருந்தது. நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.50-ம், சவரனுக்கு ரூ.400-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 400-க்கும், ஒரு சவரன் ரூ.99 ஆயிரத்து 200-க்கும் விற்பனையானது. இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் ரூ.99 ஆயிரத்தை தாண்டியது. இனிவரும் நாட்களில் ஏற்ற, இறக்கத்துடனேயே தங்கம் விலை இருக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தங்கம் விலைக்கு போட்டியாக வெள்ளி விலையும், கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருவதை பார்க்க முடிகிறது. கடந்த 11-ம் தேதி ஒரு கிராம் ரூ.209-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 9 ஆயிரத்துக்கும் விற்பனை ஆகி அப்போது புதிய உச்சத்தை பதிவு செய்து இருந்தது. அதன்பின்னர், ஒவ்வொரு நாளும் விலை அதிகரித்து தொடர்ந்து உச்சத்திலேயே இருந்து வருகிறது.

அந்த வரிசையில் கடந்த 3 நாட்களுக்கு முன் விலை சற்று குறைந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் அதிரடியாக கிராமுக்கு ரூ.11-ம், கிலோவுக்கு ரூ.11 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.222-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது. இதன் மூலம் வெள்ளி விலை வரலாறு காணாத புதிய உச்சத்தை மீண்டும் எட்டி இருந்தது.

இந்நிலையில் தங்கம் விலை நேற்று மீண்டும் அதிகரித்து விற்பனையானது. அதன்படி கிராமுக்கு ரூ.40-ம், சவரனுக்கு ரூ.320-ம் உயர்ந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.12,440-க்கும், சவரன் ரூ.99,520-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை வரலாறு காணாத வகையில் மேலும் உயர்ந்துள்ளது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2-ம், கிலோவுக்கு ரூ.2 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.224-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

### ஈக்வடார் நாட்டில் கடந்த

# ஓராண்டில் மட்டும் 9 ஆயிரத்திற்கும் அதிகமான கொலை சம்பவங்கள்..!

**பார்சிலோனா, டிச. 19-**

ஈக்வடாரில் இந்தாண்டு மட்டும் 9,000க்கும் அதிகமான கொலைகள் நடைபெற்றுள்ளதாக அந்நாட்டின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.


ஈக்வடாரில் இருக்கும் பார்சிலோனா டி குவாயாகில் கிளப்பின் டிஃபெண்டர் மரியோ ஆல்பர்டோ பினிடா மார்டினெஸ் (33 வயது) கடை வீதியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அதே இடத்தில் உயிரிழந்திருக்கும் அடையாளம் காணாத மற்றுமொரு உடலைக் குறித்து காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

மரியோ ஆல்பர்டோ பினிடா மார்டினெஸ் சர்வதேச அளவில் பார்சிலோனா டி குவாயாகில் என்று அழைக்கப்படும் பார்சிலோனா ஸ்போர்ட்டிங் கிளப்பில் டிஃபெண்டராக இருக்கிறார். இவர் தனது கால்பந்து பயணத்தை இன்டிபென்டியென்ட் டெல் வாலே கிளப்பில் (2010- 2015) தொடங்கினார். அடுத்து 2016- 2025 வரை பார்சிலோனா ஸ்போர்ட்டிங் கிளப்பில் ஒப்பந்தம் ஆனார். இதற்கிடையில் லோன் அடிப்படையில் ப்ளூமினென்ஸ் எஃப்சி மற்றும் கிளப் டிபார்டிவோவிலும் விளையாடியுள்ளார்.

இவரது கொலைக்கு கிளப் அணியினரும் ரசிகர்கள் பலரும் அதிர்ச்சியடைந்து வருத்தத்தை பதிவு செய்துள்ளார்கள். காவல்துறையினர் இந்தக் கொலை குறித்து ஏதும் தகவலைக் கூறாமல் விசாரித்து வருவதாகக் கூறியுள்ளார்.

ஈக்வடாரில் இந்தாண்டு மட்டும் 9,000க்கும் அதிகமான கொலைகள் நடைபெற்றுள்ளதாக அந்நாட்டின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. கடந்தாண்டில் 7,063ஆக இருந்த இதன் எண்ணிக்கை 2023-இல் 8,248-ஆக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**19-12-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தொழில் புரிவோருக்கு எதிர்பார்த்த அளவுக்குப் பணவரவு இருக்காது. மரியாதைக் குறைவால் மனழுத்தம் ஏற்படும். காரியத்தடைகள், வழக்குகளில் வெற்றி இன்மை ஆகியவை ஏற்படும்.

**ரிஷபம்:-** உங்கள் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உறுதி. திருமண ஏற்பாடுகள் நடக்கும். செல்வநிலை உயர்ந்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய ஆபரணங்களும் சேரும்.

**மிதுனம்:-** மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கை, பெற்றோரால் இலாபம் ஆகியவை ஏற்படும். வீடு, வாகனம் மற்றும் வயல்களால் ஆதாயம் உண்டு. நண்பர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கடகம்:-** குழந்தைகளோடு குழந்தையாய்க் கொண்டாடி மகிழ்வீர்கள். பங்குச் சந்தை ஆர்வம் கூடும். இலாபங்களும் அதிரிக்கும். அழகிய மனைவி அமைவாள். நல்ல ஆலோசகராகத் திகழ்வீர்கள்.

**சிம்மம்:-** தொழில், வியாபாரம் சம்பந்தமாக வாங்கிய கடன்களைக் கேட்டு கெடுபிடி செய்வர். தாயிடம் தர்க்கத்தைத் தவிர்த்து இனிமையாகப் பேசவும். பணிமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி:-** உங்கள் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உறுதி. திருமண ஏற்பாடுகள் நடக்கும். செல்வநிலை உயர்ந்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய ஆபரணங்களும் சேரும்.

**துலாம்:-** பணவரவு குறைய பணமுடை ஏற்பட்டும். தாய், மனைவி என அனைவர் மீதும் அவநம்பிக்கை மற்றும் சந்தேகம் ஏற்படும். சந்தோஷமின்மையால் மனக் கவலைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** சுக, சௌக்கியங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பாய் இருக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வால் மனமகிழ்ச்சி ஏற்படும். பெண்கள் விரும்பும் பொருட்களை வங்கி மகிழ்வர்.

**தனுசு:-** தொழில் புரிவோருக்கு வீண்செலவுகளும், பணமுடையும் ஏற்படலாம். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். சினத்தைக் குறைத்தால் சிக்கல்கள் தீரும்.

**மகரம்:-** தனலாபம் பெருகும். பெண்களால் இலாபமும் விரும்பிய போகமும் ஏற்படும். பிறருக்கு உதவிசெய்யும் மனோபாவம் கூடும். கல்வி, கேள்விகளில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:-** அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலமாக ஆதாயம் பெருகும். நம்பிக்கை மிக்க நண்பர்களின் உதவி கிடைக்கும். சுயநம்பிக்கை கூடும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**மீனம்:-** கற்பனை வளம் பெருகும். தொழில், வியாபாரத்தில் தனவரவு கூடும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். சுகம், சந்தோஷம் பெருகும். வாக்கால் வளம் பெருகும்.

# பிரதமர், முதல்வர் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த இளைஞர் கைது

**சென்னை, டிச. 19-**

மதுபோதையில் பிரதமர், முதல்வர் வீடுகளுக்கு இளைஞர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்த நிலையில் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே உள்ள விசுவாசபுரத்தில் செயல்படும் வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் இ-மெயில் மூலம் வந்தது. பின்னர் போலீசார் நடத்திய சோதனையில், அது புரளி என்பது தெரிய வந்தது. மேலும் அன்றைய தினம் இரவு சென்னை போலீஸ் டி.ஜி.பி. அலுவலகத்திற்கு தொலைபேசியில் ஒருவர் பேசினார்.

அவர் தமிழக முதல்வர், பிரதமர் வீடுகள் மற்றும் குமரி மாவட்டத்தில் பல இடங்களிலும் சில மணி நேரத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என்று கூறி விட்டு இணைப்பை துண்டித்து விட்டார். பின்னர் சைபர் கிரைம் மூலம் விசாரணை நடத்தப்பட்டபோது, குமரியில் இருந்து மர்மஆசாமி மிரட்டல் விடுத்தது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து குமரி மாவட்ட போலீசார் உஷார்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் பூதப்பாண்டி உச்சம்பாறை பகுதியை சேர்ந்த இசக்கிமுத்து (வயது 32) என்ற இளைஞர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது, மதுபோதையில் இப்படி செய்ததாக அதன் விபரீதத்தை உணராமல் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அவர் மதுபோதையில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக கடந்த 2013-ம் ஆண்டு கைதாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய அரசு சார்பில் அனைவருக்கும் ரூ.30 ஆயிரம் வழங்கப்பட உள்ளதா...?

## தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, டிச. 19-**

'மத்திய அரசின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ரூ.30,000 வழங்கும் திட்டம்' என்ற பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் நிலையில் அது தொடர்பாக தமிழ்நாடு அரசு விளக்கமளித்துள்ளது.

சமீபகாலமாக டிஜிட்டல் மோசடி குற்றங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. மோசடிக்காரரர்கள் வங்கி அதிகாரிகள் போல் பேசி, கடவு சொற்களை பெறுவதும், சிறிது நேரத்திலேயே கணக்கில் இருந்த பணத்தை சூறையாடுவதும் தொடர்கதையாகி விட்டது. இதை தடுக்க 'சைபர்' கிரைம் போலீசார் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதுடன், விழிப்புணர்வுடன் இருக்குமாறு அறிவுறுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், 'மத்திய அரசின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ரூ.30,000 வழங்கும் திட்டம்' என்ற பதிவு ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில் "மத்திய அரசு சார்பில் ஒவ்வொரு குடிமகனுக்கும் ரூ.30 ஆயிரம் வழங்கப்படும். 2025-ம் ஆண்டு விரைவில் முடிவடைய உள்ளதால், இந்த உதவித் தொகைக்கான விண்ணப்ப காலம் விரைவில் முடிவடையும். எனவே தயவுசெய்து கீழே உள்ள லிங்கை உடனடியாக அழுத்தி உங்கள் தொகையைப் பெறுங்கள். இந்த வாய்ப்பை தவறவிட்டால் மீண்டும் விண்ணப்பிக்க முடியாது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இதுகுறித்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "மத்திய அரசின் சார்பில் ஒவ்வொரு குடிமகனுக்கும் ரூ.30 ஆயிரம் வழங்கும் திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. இது போலியானச் செய்தி. வதந்தியைப் பரப்பாதீர்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றிய 26 இந்தியர்கள் பலி: மத்திய அரசு

**புதுடெல்லி, டிச. 19-**

உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட 26 இந்தியர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரில், ரஷ்ய ராணுவத்தில் பணியாற்ற இந்தியர்கள் சட்டவிரோதமாகச் சேர்க்கப்படுகிறார்களா? என்று திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் சாகேத் கோகலே மற்றும் காங்கிரஸ் உறுப்பினர் ரந்தீப் சிங் சுர்ஜேவாலா ஆகியோர் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்விக்கு, நேற்று (டிச. 18) பதிலளித்த மத்திய வெளியுறவு இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங், கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ரஷ்ய ராணுவத்தில் மொத்தம் 202 இந்தியர்கள் சேர்க்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் கூறியதாவது: "மத்திய அரசு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் மூலம் ரஷ்ய ராணுவத்தில் இருந்து 119 இந்தியர்கள் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டனர். மேலும், சுமார் 50 இந்தியர்கள் விடுவிக்கப்பட காத்திருகின்றனர். இந்தப் போரில், 26 இந்தியர்கள் கொல்லப்பட்டதுடன், 7 பேர் மாயமாகியுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனக் கூறியுள்ளார்.

## 38-வது நினைவு தினத்தை முன்னிட்டு
# சென்னை, எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் டிச. 24-ல் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி
## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, டிச. 19-**

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 38-வது நினைவு தினத்தை முன்னிட்டு உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெறு என்று அ.தி.மு.க. தலைமை கழகம் அறிவித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;-



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் 'பாரத் ரத்னா' இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., நம்மை ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமரர் ஆகிய நாள் 24.12.1987. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 38-ஆவது ஆண்டு நினைவு நாள் வருகிற 24-ம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு, சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் நினைவிடத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்.

தலைமை செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளும் மரியாதை செலுத்த உள்ளனர். அதனைத் தொடர்ந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நினைவிட நுழைவு வாயில் உட்புறத்தில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிகளில், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளும், கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், புரட்சித் தலைவி அம்மா பேரவை, எம்.ஜி.ஆர். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, அண்ணா தொழிற் சங்கம், வழக்கறிஞர் பிரிவு, சிறுபான்மையினர் நலப் பிரிவு, விவசாயப் பிரிவு, மீனவர் பிரிவு, மருத்துவ அணி, இலக்கிய அணி, அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வர்த்தக அணி மற்றும் கலைப் பிரிவு உட்படகழகத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகளும், கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மக்கள் பணியாற்றும் தலைவராக அன்று புரட்சி தலைவர், இன்று புரட்சி தளபதி
## விஜய்க்கு செங்கோட்டையன் புகழாரம்



**ஈரோடு, டிச. 19-**

ஈரோட்டில் நடந்த த.வெ.க.பொதுக்கூட்டத்தில் மக்கள் பணியாற்றும் தலைவராக அன்று புரட்டி தலைவர் எம்.ஜி.ஆர். இன்று புரட்சி தளபதி விஜய் என்று செங்கோட்டையன் கூறினார்.

ஈரோட்டில் விஜய்யின் மக்கள் சந்திப்பு கூட்டம் தொடங்கியது. இக்கூட்டத்தில் பங்கேற்க சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை சென்ற த.வெ.க. தலைவர் விஜய், அங்கிருந்து கார் மூலம் சாலை மார்க்கமாக கூட்டம் நடைபெறும் விஜயமங்கலத்திற்கு வந்தடைந்தார். இக்கூட்டத்தில் தொண்டர்கள் மத்தியில் செங்கோட்டையன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வரலாற்றை படைப்பதற்கு இங்கு பெருந்திரளாக வந்திருக்கிறீர்கள். அதோடு மட்டுமல்ல சில பேர் நினைக்கிறார்கள். தலைவரை பொறுத்தவரையில் மனிதநேயம் மிக்கவர். நல்லவர். வல்லவர். உங்களுக்காக வாழ்ந்து கொண்டு இருப்பவர் என்பதை மறந்து விடக்கூடாது. ஏன் என்று சொன்னால் ஒரு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் வருவாய், அதை தேவையில்லை என்று விட்டுவிட்டு மக்களுக்கு பணியாற்ற ஒரு தலைவர் வந்திருக்கிறார் என்று சொன்னால் உலக வரலாற்றில் புரட்சி தலைவரை பார்த்தேன். இன்றைக்கு புரட்சி தளபதியை காண்கிறேன். ஆகவே தான் மக்கள் இங்கு திரண்டு இருக்கிறார்கள்.

என்னை பொறுத்தவரையிலும் இது தீர்ப்பு அளிக்கிற கூட்டம். இது தீர்ப்பு அளிக்கிற கூட்டம் மட்டும் இல்ல. நீங்கள் திரண்டு வந்தால் நாடே தாங்காது என்கிற முறையில் தான் இங்கே ஆர்ப்பரித்து கொண்டு இருக்கிறீர்கள். உங்களை பொறுத்தவரையிலும் எதிர்காலம் பிரகாசம் உள்ள எதிர்காலமாக மாறப்போகிறது. நாளை தமிழகத்தை ஆள போவது தளபதி தான் என்று பேசினார்.

# மீண்டும் குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

**தென்காசி, டிச. 19-**

குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முடியும் நிலையில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது. இதற்கிடையே கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக பல்வேறு நீரோடைகளில் தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து காணப்பட்டது. அதேநேரத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் பலத்த மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலமான குற்றாலம் அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது.

இதில் மெயின் அருவியில் திடீரென்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பாதுகாப்பு வளைவை தாண்டி தண்ணீர் விழுந்தது. பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மெயின் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. மழை குறைந்து நீர்வரத்து சீராகும் பட்சத்தில் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில், நேற்று காலை மழை குறைந்து நீர்வரத்து சீரானதையடுத்து குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி அருவியின் ஒரு பகுதியில் மட்டும் குளிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அய்யப்ப பக்தர்கள், சுற்றுலா பயணிகள் அருவியில் ஆனந்த குளியல் போட்டு உற்சாகம் அடைந்தனர். மேலும் நீர்வரத்தை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தி.மு.க. அரசு மீது விஜய் விமர்சனம்: துணை முதல்வர் உதயநிதி பதில்

**சென்னை, டிச. 19-**



தி.மு.க. அரசின் மீதான த.வெ.க. தலைவர் விஜய்யின் விமர்சனத்துக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

கரூர் நெரிசல் பலி சம்பவத்திற்குப் பின்னர் த.வெ.க. தலைவர் விஜய் நேற்று ஈரோட்டில் பிரசாரத்தை மேற்கொண்டார். அப்போது தி.மு.க. அரசையும் முதல்வர் ஸ்டாலினையும் கடுமையாக விமர்சித்துப் பேசினார். தி.மு.க. தீய சக்தி, த.வெ.க. தூய சக்தி என்றெல்லாம் விஜய் பேசினார். சென்னை விமான நிலையத்திற்கு வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் இதுகுறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த உதயநிதி, "விஜய்யிடம் இதே போல என்னைக்காவது கேள்வி கேட்டிருக்கிறீர்களா? விஜய்யை ஒருமுறை பேச விடுங்கள். அப்போது தெரியும்" என்று கூறிவிட்டுச் சென்றார். பொதுக்கூட்டங்கள், பிரசாரங்களில் பேசும் த.வெ.க. தலைவர் விஜய், இதுவரை செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தியதில்லை என மற்ற கட்சிகள் தொடர்ந்து விமர்சித்து வருகின்றன. இந்நிலையில் உதயநிதி ஸ்டாலினும் இதை சுட்டிக்காட்டி பேசியுள்ளார்.

# ஈரோடு பிரச்சாரத்தில் சீமானை மறைமுகமாக விமர்சித்த விஜய்

**ஈரோடு, டிச. 19-**

ஈரோடு பிரச்சாரத்தில் சீமானை மறைமுகமாக விஜய் விமர்சித்ததாக இணையத்தில் பலர் தெரிவித்து வருகின்றனர்.

ஈரோடு அருகே விஜயமங்கலம் சரளையில் த.வெ.க. சார்பில் மக்கள் சந்திப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது. பிரசார வாகனத்தில் ஏறிநின்று கையசைத்த விஜயை கண்டு ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர். இக்கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், "ஈரோட்டில் பிறந்த தந்தை பெரியார் நமது கொள்கை தலைவர். ஈரோடு கடப்பாரை பெரியார். தமிழ்நாட்டையே திருப்பிப் போட்ட நெம்புகோல். 100 ஆண்டுகளுக்கு முன்பே வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் கேட்டவர் பெரியார்" என்று புகழ்ந்து பேசினார்.

மேலும் பேசிய விஜய், "எதிரிகள் யார் என்று சொல்லிவிட்டுதான் வந்திருக்கிறோம். அதனால் அவர்களை மட்டும் தான் எதிர்ப்போம். அதுவும் 2026 தேர்தலில், களத்தில் இருப்பவர்களைதான் எதிர்ப்போம். களத்தில் இல்லாதவர்களையும், களத்திற்குள் அவர்களுக்கும் நமக்கும் இல்லாதவர்களையும் எதிர்ப்பதற்காக எந்த ஐடியாவும் இல்லை" என்று தெரிவித்தார்.

களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க மாட்டோம் மற்றும் ஈரோடு கடப்பாரை பெரியார் என்று விஜய் பேசியது சீமானை விமர்சிக்கும் வகையில் உள்ளது என்று நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர். சமீபத்தில் ஆர்.எஸ்.எஸ்-ன் 'விஜில்' அமைப்பு சார்பில் பாரதியார் பிறந்த நாள் விழா மற்றும் வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு விழா நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு பாரதியார் குறித்தும், பெரியார் குறித்தும் பேசியிருந்தார்.

"பார்ப்பனர் என்ற கடப்பாரையை கொண்டு திராவிடத்தை இடித்து தள்ளுவேன்" என்று அவர் பேசியிருந்தார். பார்ப்பனர் என்ற கடப்பாரையை கொண்டு திராவிடத்தை இடித்து தள்ளுவேன் என்று சீமான் பேசியதற்கு எதிர்வினையாக தான் ஈரோடு கடப்பாரை பெரியார் என்று விஜய் பேசியுள்ளதாக இணையத்தில் நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர்.

# சாகித்ய அகாடமி விருது அறிவிப்பு நிகழ்ச்சி ரத்து

**சென்னை, டிச. 19-**

2025 ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிப்பு நிகழ்ச்சி திடீர் ரத்து செய்யப்பட்டது.

இந்தியாவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றாக சாகித்ய அகாடமி விருது கருதப்படுகிறது. நாட்டின் அதிகாரப்பூர்வமாக 24 மொழிகளிலிருந்து கவிதை, சிறுகதை, நாவல், இலக்கிய ஆய்வு படைப்புகளுக்காக எழுத்தாளர்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த நிலையில், நேற்று 2025 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிப்பு நிகழ்ச்சி நடைபெற இருந்தது.

ஆனால், விருதுகளை இறுதி செய்வதில் இழுபறி நீடிப்பதால் நேற்றைய நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், செய்தியாளர்களுடனான சந்திப்பையும் சாகித்ய அகாடமி நிர்வாகிகள் ரத்து செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழில் 2024 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதை, திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908 (ஆய்வு நூல்) நூலுக்காக எழுத்தாளர் ஆ. இரா.வேங்கடாசலபதி வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஏ.ஐ. முறையில் சுங்க கட்டணம் வசூல்
## மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி, டிச. 19-**

ஏ.ஐ. அடிப்படையில் சுங்க கட்டணம் வசூல் அடுத்த ஆண்டு இறுதிக்குள் அமலுக்கு வரும் என்று மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை கேள்வி நேரத்தில் மத்திய சாலை போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி கூறியதாவது:- முன்பெல்லாம் சுங்கச்சாவடிகளில் கட்டணத்தை பணமாக செலுத்த வேண்டி இருந்ததால், 3 முதல் 10 நிமிடங்கள் காத்திருக்க வேண்டி இருந்தது. 'பாஸ்டேக்' வந்த பிறகு இந்த நேரம் 60 வினாடிகளை விட குறைந்தது. நமது வருவாய் ரூ.5 ஆயிரம் கோடி அதிகரித்தது. தற்போது, எம்.எல்.எப்.எப். என்ற செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) அடிப்படையில் டிஜிட்டல் கட்டணம் வசூலிக்கும் முறை வரப்போகிறது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் இம்முறை அமலுக்கு வரும். இதன்மூலம் வாகனங்கள் மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் சுங்கச்சாவடிகளை கடக்கலாம். அங்கு நிறுத்த வேண்டியது இல்லை.

வாகன நம்பர் பிளேட்டுகள், ஏ.ஐ.யுடன் செயற்கைக்கோள் மூலம் அடையாளம் காணப்பட்டு, பாஸ்டேக் மூலமாக கட்டணம் வசூலிக்கப்படும். அந்த திட்டம் வந்த பிறகு எரிபொருளில் ரூ.1,500 கோடி சேமிக்கப்படும். அரசின் வருவாய் ரூ.6 ஆயிரம் கோடி அதிகரிக்கும். இவ்வாறு கூறினார்.

## பயமில்லை பயமில்லை என்று சொல்லும்
# எதிரிகள் த.வெ.க.வை கண்டு கதறுகிறார்கள்
## கரூர் பிரச்சாரத்தில் விஜய் பரபரப்பு பேச்சு

**ஈரோடு, டிச. 19-**



பயமில்லை பயமில்லை என்று சொல்லும் எதிரிகள் த.வெ.க.வை கண்டு கதறுகிறார்கள் என கரூர் பிரச்சாரத்தில் விஜய் பேசினார். மேலும், களத்தில் இருக்கும் எதிரிகளை மட்டுமே நாங்கள் எதிர்க்கிறோம். களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு அருகே விஜயமங்கலம் சரளையில் த.வெ.க. சார்பில் மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக 16 ஏக்கர் பரப்பளவில் பொதுக்கூட்ட மைதானம் பிரமாண்டமாக அமைக்கப் பட்டிருந்தது. முன்னதாக சென்னையில் இருந்து தனி விமானத்தில் நேற்று காலை 10 மணி அளவில் கோவை விமான நிலையம் வந்தடைந்தார் விஜய். பின்னர் அங்கிருந்து கார் மூலம் நேராக விஜயமங்கலம் பொதுக்கூட்ட மைதானத்துக்கு வந்தார். வழி நெடுக அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விஜய்யின் வாகனத்தை இரு சக்கர வாகனத்தில் தொண்டர்கள் பின் தொடர்ந்து வந்தனர்.

இதனைத்தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறும் மைதானத்துக்கு விஜய் வருகை தந்தார். அவருக்கு த.வெ.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனிடையே த.வெ.க. பொதுக்கூட்டம் நடைபெறும் மைதானம் தொண்டர்களால் நிரம்பி வழிந்தது. இதனைத்தொடர்ந்து மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் , ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் ஆவேசமாக உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:- நல்ல காரியத்தை தொடங்கும் முன் மஞ்சள் எடுத்து வைத்தே தொடங்குவார்கள். மஞ்சள் என்றாலே தனி வைப்தான். நம் கொடியில் கூட மஞ்சள் நிறம் உள்ளது. ஈரோடு விவசாயத்திற்கு உறுதுணையாக இருப்பது காளிங்கராயன் அணை மற்றும் கால்வாய். எனக்கு எதிராக சூழ்ச்சி செய்யும் சூழ்ச்சிகார கூட்டம் ஒன்று தொடர்ந்து அதை செய்து வருகிறது. ஈரோடு மண்ணில் மகத்தான மனிதரை பற்றியும் நாம் பேசியாக வேண்டும்.

எல்லாத்தையும் விட்டு விட்டு வந்த இந்த விஜய்யை மக்கள் ஒருநாளும் கைவிட மாட்டார்கள். விஜய்யை மக்கள் ஒருநாளும் கைவிட மாட்டார்கள். வாழ்நாள் முழுவதும் நான் நன்றியுடன் இருப்பேன். நான் சினிமாவுக்கு வந்த 10 வயதில் இருந்து இந்த மக்களுடனான உறவு தொடங்கியது. எல்லாத்தையும் விட்டு விட்டு வந்த இந்த விஜய்யை மக்கள் ஒருபோதும் கைவிட மாட்டார்கள். உங்களை நம்பிதான் அரசியலுக்கு வந்திருக்கிறேன் என்னை கைவிட்டு விடாதீர்கள். எனக்காக இறுதிவரை நிற்பீர்களா? நானும் உங்களுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் இருப்பேன்.

மக்களுக்கு எதுவுமே செய்யாமல் கதைகளை மட்டுமே அடித்து விடுகின்றனர். அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை விரிவுபடுத்தினால் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்? ஈரோடு கடப்பாரை பெரியார்; தமிழ்நாட்டையே திருப்பிப் போட்ட நெம்புகோல். 100 ஆண்டுகளுக்கு முன்பே வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் கேட்டவர் பெரியார். பெரியாரிடம் இருந்து எங்களுக்குத் தேவையான கொள்கைகளை எடுத்துக் கொண்டோம். பெரியார் எங்கள் கொள்கை முன்னோடி.

பொது வாழ்க்கையில் இருந்தபோதும் ஒரு பைசா சம்பாதிக்காதவர் பெரியார். தந்தை பெரியாரின் பெயரைக் கூறிக் கொண்டு கொள்ளை அடிக்காதீர்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன். களத்தில் இருக்கும் எதிரிகளை மட்டுமே நாங்கள் எதிர்க்கிறோம். களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க மாட்டோம். அண்ணாவும் எம்.ஜி.ஆரும் தமிழ்நாட்டின் சொத்து; அவர்களை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். தமிழக வெற்றிக் கழகம் ஒரு பொருட்டே இல்லைதானே. பின் ஏன் கதறுகிறீர்கள். உங்களுக்கு காசுதான் துணை; எனக்கு என் மீது எல்லையில்லா அன்பு வைத்திருக்கும் இந்த மாஸ் தான் துணை.

காஞ்சிபுரம் நிகழ்ச்சியில் பேசியதை தவறாக புரிந்து கொண்டார்கள், மீண்டும் ஒருமுறை விளக்கமளிக்கிறேன். நான் சலுகைகளுக்கு எதிரானவன் இல்லை. மக்களுக்கான சலுகைகளை இலவசங்கள் என்று சொல்லி அசிங்கப்படுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. மக்கள் காசில் மக்களுக்கு செய்வது எப்படி இலவசமாகும். மக்களுக்கு ஒன்று என்றல் இந்த விஜய் வந்து நிற்பான். விஜய் எப்போதும் மக்கள் பக்கம் தான். மக்கள் மானத்தோடு வாழ வேண்டும் .

தி.மு.க. ஆட்சியில் அனைவருக்கும் வீடு இருக்க வேண்டும் என கேட்டோம், அனைவருக்கும் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அனைவரும் சொந்த வீட்டிலேயேவா இருக்கீங்க, வாடகை வீட்டில் இல்லையா..?. தொடர்ந்து வீட்டில் ஒரு பட்டதாரி இருக்க வேண்டும் என்று கேட்டோம். தமிழ் நாட்டில் பல மாணவர்கள் பள்ளியில் இடைநின்றது தி.மு.க. ஆட்சியில்தான். உங்கள மாதிரி தனிப்பட்ட முறையில், தரக்குறைவாக அசிங்க அசிங்கமாக பேசுறதுதான் அரசியல்னா, அது எனக்கு வராது. வராதுன்னா... நல்லாவே வரும். வேண்டாம்னு விட்டு வெச்சிருக்கேன்.

2026 தேர்தலில் களத்தில் இருப்பவர்களை மட்டுமே நாங்கள் எதிர்க்கிறோம். நீங்கள் கேட்பதற்காக எலாம் களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க முடியாது. சொல்வது ஒன்று; செய்வது ஒன்று என்று தி.மு.க. அரசு செயல்படுகிறது. தி.மு.க.வும் பிரச்சினைகளும் பெவிகால் போட்டி ஒட்டியது போன்றது; பிரிக்கவே முடியாது. எதிரிகள் யார் என்று சொல்லிவிட்டு களத்திற்கு வந்திருப்பதால் அவர்களை தான் எதிர்ப்போம். எங்களுக்கு த.வெ.க.வை கண்டு பயமில்லை பயமில்லை என்று சொல்லிக் கொண்டே கதறுகிறார்கள்.

மாறுவேடத்தில் மரு வைத்துக் கொண்டு வருபவர்கள், மண்டை மீது இருக்கும் கொண்டையை மறைக்க வேண்டும். விஜய்யை, த.வெ.க.வை எப்படி முடக்கலாம் என்றே 24 மணிநேரமும் அரசு சிந்தித்து வருகிறது. ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். ஏன் தி.மு.க.வை இப்படி விமர்சிக்கிறார்கள் என்று நினைத்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது. அவர்கள் சொன்னதையே நானும் சொல்கிறேன். தி.மு.க. ஒரு தீய சக்தி, தீய சக்தி, தீய சக்தி.. த.வெ.க ஒரு தூய சக்தி.. தீய சக்தி தி.மு.க.வுக்கும், தூய சக்தி த.வெ.க.வுக்கும் இடையே தான் போட்டியே. மக்கள் விரோத தி.மு.க. அரசை வீழ்த்த மக்கள் சக்திமிக்க நம்மால் தான் முடியும்.

அண்ணன் செங்கோட்டையன் த.வெ.க.வில் இணைந்தது கட்சிக்கு மிகப் பெரிய பலம். செங்கோட்டையன் அண்ணன் போல் இன்னும் நிறைய பேர் த.வெ.க.வில் வந்து சேர இருக்கிறார்கள். த.வெ.க.வுக்கு வருபவர்கள் அனைவருக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும். இவ்வாறு அவர்கூறினார். இதனைத்தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய்க்கு, செங்கோட்டையன் வெள்ளி செங்கோல் வழங்கி கவுரவித்தார்.

# வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை அறிவது எப்படி..?

**சென்னை, டிச. 19-**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்(எஸ்எஸ்ஆர்) பணிகள் முடிவடைந்த நிலையில் வெளியாகவுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் உங்களுடைய பெயர் இடம்பெறுமா என்பதை தெரிந்துகொள்ளலாம்.

இன்று வெளியாகவுள்ள வரைவு வாக்காளர்கள் பட்டியலில் உங்களது பெயர் இடம் பெறுமா என்பதை முன்கூட்டியே அதாவது இன்றே அறிந்துகொள்ளலாம். https://electoralsearch.eci.gov.in/ என்ற தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திற்குச் சென்று உங்களுடைய வாக்காளர் அடையாள எண் அல்லது உங்களுடைய தனிப்பட்ட விவரங்களை அளித்தால் விவரங்கள் திரையில் தோன்றும். அதில் உங்களுடைய பெயர், தந்தை பெயர், மாவட்டம், தொகுதி, வாக்குச்சாவடி இடம், வாக்குச்சாவடி தொகுதி எண் ஆகியவை இடம்பெற்றிருக்கும். மேலும் விவரங்களுக்கு என்பதை கிளிக் செய்தால் உங்களுடைய விவரங்கள் அனைத்தும் ஒரு தனி திரையில் திறக்கும். அதில் உங்களுடைய தனிப்பட்ட விவரங்களுடன் வாக்குச்சாவடி அதிகாரி, வாக்குச்சாவடி அலுவலர் ஆகியோரின் பெயர் மற்றும் தொடர்பு எண்களும் இருக்கும். இந்த பக்கத்தை நீங்கள் பிடிஎப் வடிவில் எடுத்து சேமித்து வைத்துக் கொள்ளலாம். வாக்குச்சாவடி அலுவலரிடம் நீங்கள் எஸ்ஐஆர் கணக்கீட்டுப் படிவத்தை நிரப்பிக் கொடுத்திருந்தால் உங்களுடைய பெயர், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். நீங்கள் படிவம் நிரப்பிக் கொடுத்தும் பட்டியலில் பெயர் இல்லை என்றால் இந்த ஆவணத்தைக் கொண்டு வாக்குச்சாவடி அலுவலரை அணுகலாம்.

ஒருவேளை படிவம் நிரப்பிக் கொடுக்கவில்லை என்றால் புதிய வாக்காளராக சேர்வதற்கு வாக்குச்சாவடி அலுவலரிடம் படிவம் 6 -யைப் பெற்று உரிய ஆவணங்களுடன் அதனை நிரப்பிக் கொடுக்க வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டிருந்தாலோ அல்லது ஏதேனும் மாற்றம் இருந்தாலோ டிசம்பர் 19 முதல் 2026 ஜன. 18 ஆம் தேதி வரை வாக்குச்சாவடி அலுவலரைத் தொடர்புகொண்டு மாற்றங்களை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



2026, 2031-ம் ஆண்டு என நாங்கள் போய்க்கொண்டே இருப்போம். மக்களிடம் இருந்து விஜய்யை பிரிக்க பார்த்தார்கள். ஆனால் இந்த மக்கள் சக்தி, பெண்கள் சக்தி விஜய் மீது பெரியளவில் அன்பையும், நம்பிக்கையையும் வைத்திருக்கிறது. இந்த சக்தியை யாராலும் பிரிக்க முடியாது.

- ஆதவ் அர்ஜுனா



காந்தியாரின் பெயரை காக்கவோ, மீட்கவோ வேண்டிய அவசியம் இல்லை. நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தமிழ்நாடு அரசின் மீது சுமை கூடுகிறது. ஏழைகளுக்கு சேர வேண்டிய பணம், உதவி, நலத் திட்டங்கள் குறைகிறது. அதை மீட்கவும், காக்கவும் தான் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

- கமல்ஹாசன்



வி.பி.ஜி. ராம் ஜி மசோதா இந்தியாவின் கிராமப்புற மக்களுக்கு முற்றிலும் எதிரானது. மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கிறது. இது மக்களின் வேலைவாய்ப்பு உரிமையைப் பறித்துள்ளது. இந்த மசோதா தேவை அடிப்படையிலான மசோதாவாகக் கொண்டுவரப்பட்டது, ஆனால் இன்று, இதை ஒதுக்கீடு அடிப்படையிலான மசோதாவாக மாற்றிவிட்டார்கள்.

- கனிமொழி



மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்க அரசு கொண்டு வந்துள்ள செயலி நடைமுறை, பல லட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி நடைபெறும் டெல்டா மாவட்டங்களில் சாத்தியமல்ல. இந்த நடைமுறையில் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட போதிய அலுவலர்கள் இல்லை. எனவே புதிய நடைமுறையை கைவிட வேண்டும்.

- வைகோ

பெண்கள் பாதுகாப்பு மற்றும் பொதுச் சாலைகள், போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்க

# காவல்துறை, சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படும் வகையில் காவல்-சமூக கூட்டரங்கம்




**சென்னை,டிச.19**

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெண்கள், சிறுமிகள் உள்ளிட்ட அனைத்து பாலினங்களும் தன்னம்பிக்கை, மரியாதை மற்றும் பாதுகாப்புடன் நகரத்தில் வாழும் சூழலை உருவாக்குவதில் பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்ச்சியான பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பாக, மரியாதையுடன் வாழும் நகரத்தை உருவாக்கும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் "16 நாள் உலகளாவிய பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம்பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உலகளாவிய பாதுகாப்பு இயக்கமாக "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான டிஜிட்டல் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றுபடுங்கள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, பெண்ணுரிமை பேணுவோம், பெண்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவோம் என்ற முழக்கத்துடன் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில் பெண்கள் பாதுகாப்பு, பொதுச் சாலைகள், போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்க காவல்துறை, சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படும் வகையில் "பாதுகாப்பான மற்றும் பெண்களுக்குப் பொருத்தமான சென்னை" என்ற கருப்பொருளுடன் காவல்-சமூக கூட்டரங்கம் (கோயம்பேடு, சூப்பர் டவுன்ஹவுஸில் நடைபெற்றது.

இந்தக் கூட்டரங்கில் பொதுப் போக்குவரத்து, தெருக்கள் டிஜிட்டல் இடங்கள், சமூக ஈடுபாடு உள்ளடக்கிய பாதுகாப்பான சென்னையும் அதன் புரிதல் குறித்தும், பெண்கள் பாதுகாப்புக்கான புகார்கள் செய்ய எளிமையான வழிமுறைகளுக்கான புகார்கள் மற்றும் உதவி சேவைகள் குறித்தும், தகவல் பரப்பும் முகாம்கள், ஹெல்ப் லைன்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் ஆதரவு, சமூக ஒத்துழைப்பு குறித்தும், சம்பவங்களை பாதுகாப்பாக புகாரளிக்க ஏதுவாக திடீர் சாட்சியர்கள் நடவடிக்கைகள் குறித்தும், காவல்துறை-சமூக ஒத்துழைப்பினை வலுப்படுத்துதல், பொதுச்சாலை மற்றும் போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பு ஆய்வுகள், தொழில்நுட்ப வசதிகள், சமூக தலைவர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை இணைத்து பெண்களுக்கான தோழமையான இடங்களை உருவாக்குவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கூடுதல் இயக்குநர் சக்திவேல், காவல் உதவி ஆணையாளர் செல்வி ரித்து, சமூக பாதுகாப்புத் துறையைச் சார்ந்த குழந்தைகள் நலக் குழுவின் உறுப்பினர்கள் லாரன்ஸ்,பத்மநாபன், நலிவடைந்த நகர்ப்புற சமூகங்களுக்கான தகவல் மற்றும் வள மையத்தின் நிறுவனர் வனேசா பீட்டர், பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமை ஆர்வலர் ஆன்ட்ரூ, சமூக நலத்துறையின் மாநில பணி ஒருங்கிணைப்பாளர் எழிலன், ஐபிஇ குளோபல் பாலின நிபுணர் எஸ்தர் ராணி, மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், தோழமை தொண்டு நிறுவன நிதி மேலாளர் டயனா டாலி, திட்ட அலுவலர் பெனிட்டா, அருணோதயா ஆலோசகர் செல்லம்மாள், சமூக அமைப்பாளர் லோகநாயகி மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.




**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தாட்கோ மற்றும் திருவள்ளூர் நகராட்சி தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்.இதில் தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர்கள் நல வாரிய மாநில உறுப்பினர் தி.அரிஷ் குமார்.,திருவள்ளூர் நகராட்சி சுகாதார அலுவலர் மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் 21 கிறித்துவ மகளிருக்கு தொழில் தொடங்க ரூ.4.20 லட்சம்: கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்

**காஞ்சிபுரம், டிச. 19 -**

காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், கிறிஸ்தவர்கள் தொழில் தொடங்க ரூ. 4.20 லட்சம் மதிப்பீட்டில் நல திட்ட உதவிகளை கலெக்டர் கலைச்செல்வி நேற்று வழங்கினார்.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ஆண்டுதோறும் டிசம்பர் 18ம் தேதி சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மதவழி சிறுபான்மையினர்களான இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், புத்தமதத்தினர், பாரசிகர்கள், சீக்கியர்கள் மற்றும் சமணமதத்தினர் ஆகியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட உதவிகள் அவர்களை சென்றடைய வேண்டும். இதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழா கொண்டாடப் படுகின்றன. மேலும் உலமாக்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ நல வாரியங்களில் பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கு கல்வித் உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மையின மக்களுக்கு இலவச தையல் இயந்திரம், இஸ்லாமியர்கள் ஹஜ் புனித யாத்திரை செல்ல மானியம், ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனை தொடர்ந்து இன்று காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் கலெக்டர் கலைச்செல்வி தலைமையில் நடைபெற்ற சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழாவில் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் 21 கிறித்துவ மகளிருக்கு தொழில் தொடங்குவதற்கு ரூ.4.20 இலட்சம் மதிப்பிலான கடனுதவி காசோலைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பார்த்தசாரதி, அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**



**சென்னை வளசரவாக்கம் மண்டலம் 151 வது வார்டு சின்னபோரூர், அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் 11-ம் வகுப்பு பயிலும் 381 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை காரம்பாக்கம் க.கணபதி எம்.எம்.ஏ வழங்கினார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ்,தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், வட்ட செயலாளர் அ.மோசஸ், மாவட்ட பிரதிநிதி வி.விஜயன் மற்றும் பலர் உள்ளனர்.**

# சென்னை துரைப்பாக்கம் பகுதியில் தனியார் நிறுவன ஊழியரை தாக்கி பணம் பறித்த இருவர் கைது

**சென்னை டிச 19-**

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மனோ, என்பவர் சென்னை, பெருங்குடியில் குடும்பத்துடன் வசித்துக் கொண்டு தனியார் நிறுவனத்தில் பொருட்கள் டெலிவரி செய்யும் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 16.ந் தேதி அன்று மதியம், வாடிக்கையாளருக்கு ஆர்டர் செய்த பொருட்களை டெலிவரி செய்ய தனது இருசக்கர வாகனத்தில், துரைப்பாக்கம், சீவரம் செல்வ கணபதி அவென்யூ 3வது தெருவில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த இருவர் மேற்படி மனோவை வழிமறித்து, தகாத வார்த்தைகள் பேசி, பணம் கேட்டுள்ளனர். மனோ பணம் தர மறுக்கவே, அவரை கை மற்றும் தலைக்கவசத்தால் தாக்கி, கத்தியைக் காட்டி மிரட்டி அவர் வைத்திருந்த பணம் ரூ.900 ஐ பறித்துக் கொண்டு, இருவரும் தப்பிச் சென்றனர். இது குறித்து மனோ, துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.மோகன கிருஷ்ணன்,2. தினேஷ்பாபு, ஆகிய இருவரைன் கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் பணத்தில் செலவு செய்தது போக பணம் ரூ.320 ஐ மீட்கப்பட்டு, 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் மோகன கிருஷ்ணன் மீது ஏற்கனவே 2 திருட்டு வழக்குகளும், தினேஷ்பாபு மீது கஞ்சா உட்பட 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஐ.சி.எப் - வடக்கு கடகற்கரை காவல் நிலையங்களில் தலைமறைவான இருவர் கைது

**சென்னை டிச 19-**

ஐ.சி.எப். காவல் நிலையத்தில் கடந்த 2022ம் ஆண்டு தாக்கலான செயின் பறிப்பு வழக்கில் தொடர்புடைய எதிரி கரண், எஸ்.ஏ.காலனி 3வது தெரு, சர்மா நகர், சென்னை என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற கரண், எழும்பூர், 5வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி கரண் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 12.08.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.ஐ.சி.எப். காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி கரண், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி கரண் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.இதே போல் கடந்த 2023ம் ஆண்டு வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் தாக்கலான திருட்டு வழக்கில் தொடர்புடைய எதிரி நவீன் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்று, ஜார்ஜ் டவுன், 7வது பெருநகர நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி நவீன் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 20.08.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி நவீன், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி நவீன் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

# சென்னை கோயம்பேடு பகுதியில் செல்போன் பறித்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை டிச 19-**

திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர், தளவாய்புரம் பகுதியில் வசித்து வரும் மாரியப்பன், என்பவர் சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். இவர் விடுமுறைக்கு சொந்த ஊருக்கு சென்றுவிட்டு, கடந்த 2. ந் தேதி அன்று மாலை, கோயம்பேடு, ரத்தினபுரி தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, மாரியப்பனை பின்தொடர்ந்து வந்த 2 பேர் அவரை வழிமறித்து, பீர் பாட்டிலால் தலையில் தாக்கி, மாரியப்பன் சட்டைப் பையில் வைத்திருந்த ரியல்மி செல்போனை பறித்துக் கொண்டு, இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இத்தாக்குதலில் இரத்த காயமடைந்த மாரியப்பன், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகாரின்பேரில், கோயம்பேடு சி.எம்.பி.டி. காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கோயம்பேடு சி.எம்.பி.டி. காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி பார்த்திபன் (எ) அவதார் என்பவரை கடந்த 9 ந் தேதி அன்று கைது செய்து, குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்து, எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

மேலும், கோயம்பேடு சி.எம்.பி.டி. காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பல்வேறு இடங்களில் தேடி, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட மற்றொரு தலைமறைவு எதிரி சத்யா (எ) ராஜி (எ) கோழி, என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சத்யா (எ) ராஜி (எ) கோழி விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# வளசரவாக்கம் மற்றும் தி.நகர் வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது

**சென்னை டிச 19-**

சென்னைவளசரவாக்கம் காவல் நிலையத்தில்கடந்த 2024ம் ஆண்டு தாக்கலான வழிப்பறி வழக்கில் தொடர்புடைய எதிரி விக்னேஷ் (எ) விக்கி, என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்று, பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி விக்னேஷ் (எ) விக்கி என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 06.ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.வளசரவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி விக்னேஷ் (எ) விக்கி, என்பவரை கைது செய்து நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டதுமேலும் தி.நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 2017ம் ஆண்டு தாக்கலான போக்சோ வழக்கில் தொடர்புடைய எதிரி ஈஸ்வரன் என்பவர் மகிளா நீதிமன்றத்தில் விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், எதிரி ஈஸ்வரன் என்பவர் மீது நீதிமன்றம் 05.09.2023 அன்று பிடியாணை பிறப்பித்தது. தி.நகர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பல்வேறு இடங்களில் தேடி எதிரி ஈஸ்வரன், என்பவரை கைது செய்து பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# குட்கா புகையிலை பாக்கெட்டுகளை காரில் கடத்தியவர் கைது

**சென்னை டிச 19-**

சென்னை ஆதம்பாக்கம் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் நேற்று முன் தினம் , நங்கநல்லூர், தில்லை கங்கா நகர் சப்வே அருகே வாகன தணிக்கையிலிருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கிடமாக வந்த வெள்ளை நிற இன்டிகா காரை நிறுத்தி விசாரணை செய்து, காரை சோதனை செய்த போது, கார் டிக்கியில் 10 மூட்டைகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகளை மறைத்து கடத்தி வந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பொருட்களை காரில் கடத்தி வந்த ஜெயசீலன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 75.5 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், விமல் மற்றும் கூலிப் ஆகிய 12,250 குட்கா புகையிலை பாக்கெட்டுகள், 1 செல்போன் மற்றும் மேற்படி இன்டிகா கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஜெயசீலன் ஆந்திராவிலிருந்து குட்கா புகையிலை பாக்கெட்டுகளை காரில் கடத்தி வந்து சென்னையில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி ஜெயசீலன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# திரு.வி.க நகர் பகுதியில் மளிகை கடை உரிமையாளரிடம் பணம் பறித்த 3 பேர் கைது

சென்னை டிச 19-

சென்னை, திரு.வி.க நகர், பாஷ்யம் தெருவில் வசித்து வரும் கௌதம், என்பவர் பெரம்பூர் எஸ்.பி.ஆர். கோயில் தெருவில் மளிகை கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று முன்தினம் காலை கடையிலிருந்த போது, அங்கு வந்த அறிமுகமான சமியுல்லா உட்பட மூவர் கௌதமிடம் பணம் கேட்டுள்ளனர். கௌதம் என்னிடம் பணம் ஏதும் இல்லை என்று கூறியதும், மூவரும் சேர்ந்து கௌதமை அவதூறாக பேசி கத்தியைக்காட்டி மிரட்டி கல்லா பெட்டியில் வைத்திருந்த ரூ.ஆயிரம் பறித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். இது குறித்து கௌதம் திரு.வி.க நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திரு.வி.க நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சமியுல்லா, 2.சையத் கலிமுல்லா, 3.முஸ்தாக் அகமது, ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் பணத்தில் செலவு செய்தது போக பணம் ரூ.300ஐ மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# ஜெ.ஜெ.நகர் பகுதியில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் விற்ற வழக்கில் 4 பேர் கைது

**சென்னை டிச 19-**


சென்னையில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து ஜெ.ஜெ.நகர், ஜீவன் பீமா நகர் பார்க் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 4 பேரிடம் விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஜெ.ஜெ.நகர் காவல் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள்வைத்திருந்த எதிரி 1.அஸ்வின், 2.முகமது மிடியேஜ், , 3.சுனில் தாமங், ம் 4.நிஷான் தாமங், ஆகிய நால்வரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3.5 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 150 கிராம் கஞ்சா மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல்செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் எதிரி அஸ்வின் பெருங்களத்தூர் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும் இவர் கேரளாவிலிருந்து மெத்தம்பெட்டமைன் வாங்கி வந்து மேற்படி நபர்களுடன் சேர்ந்து சென்னையில் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. முகமது மிடியேஜ் ஜெ.ஜெ.நகர் பகுதியில் டீகடையில் வேலை செய்து வருவதும், சுனில் தாமங் மற்றும் நிஷான் தாமங் ஆகிய இருவரும் துரித உணவகத்தில் வேலை செய்து வருவதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 4 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்

# தாய்லாந்து சுற்றுலா சென்று கஞ்சா வாங்கி வந்து சென்னை சுற்றுவட்டார பகுதிகளில் விற்பனை: 3 பேர் கைது

**சென்னை டிச 19-**

சென்னை பல்லாவரம் அடுத்த திருநீர்மலை சாலையில் கஞ்சா கை மாறுவதாக சங்கர் நகர் காவல் நிலையத்திற்கு ரகசிய தகவல் வந்தது தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்தில் சென்று நீண்ட நேரமாக நோட்டமிட்ட காவல்துறையினர் கையில் சிறிய ரக தவறுடன் அங்கும் இங்கும் நடந்தவாறு நீண்ட நேரமாக காத்திருந்த நபர் ஒருவரை அழைத்து ஆய்வு செய்தனர். அப்போது அவரிடம் கஞ்சா இருப்பதும் தெரியவந்தது. உடனடியாக அவரை காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர். முதற்கட்ட விசாரணையில் ரெடில்ஸ் பகுதியை சார்ந்த சூர்யா என்பது தெரிய வந்தது. அவர் கையில் வைத்திருந்த கவரில் 200 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.மேலும் போலீஸ் பாணியில் விசாரணை மேற்கொண்டபோது அவரின் நண்பர்களான ராஜ்குமார், தீபக்சுந்தர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து சுற்றுலா செல்வதுபோல் தாய்லாந்து சென்று அங்கு ஓஜி ரக விலையுயர்ந்த கஞ்சாவை வாங்கி விமான பார்சல் சேவை மூலம் அனுப்பிவிட்டு சென்னையில் டெலிவரி எடுத்ததாகவும், அதன் பிறகு அதை 200 கிராம் பாக்கெட்டுகளாக பிரித்து சென்னை சுற்றுவட்டார பகுதிகளில் விற்பனை செய்து வந்ததும் தெரிய வந்தது. அவர்களிடம் இருந்து 200 கிராம் பதபடுத்தபட்ட கஞ்சாவும் அதேபோல் நான்கு கிலோ கஞ்சா இலைகள் மற்றும் செல்போன்களை போலீசார் கைப்பற்றி வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.



**சென்னை மணலி ஏரியில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளபுனரமைப்புபணிகளின்காரணமாக தற்போது பெய்த மழையால் நீர் நிரம்பி வழிகிறது.**

# மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் ரூ 84.43 லட்சம் உண்டியல் காணிக்கை



செஞ்சி டிச 19

விழுப்புரம் மாவட்டத்தில் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோயில் பிரசித்தி பெற்ற சுற்றுலா கோயில் தலமாக விளங்குகிறது இக்கோயிலில் தினந்தோறும் ஆயிரகணக்கான பக்தர்கள் அம்மனை தரிசனம் செய்து வழிபடுகின்றனர்.

மேலும் மாதந்தோறும் இக் கோயிலில் நடைபெறும் அமாவாசை ஊஞ்சல் உற்சவத்தில் சுமார் 1 லட்சம் பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்.அம்மாவாசை திருவிழாவிற்கும் .கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்களின் வேண்டுதல் நிறைவேற உண்டியலில் காணிக்கையாக பணம் மற்றும் தங்கம், வெள்ளி ஆகியவற்றை செலுத்தி வருகின்றனர்.அ த னைத் தொடர்ந்து கார்த்திகைமாதம் உண்டியல் எண்ணிக்கை நேற்று முன்தினம் கோயில் வளாகத்தில் எண்ணப்பட்டது.இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர்கள் கள்ளக்குறிச்சி ரமேஷ் மேல்மலையனூர் ஆணையர் சக்திவேல், அறங்காவலர் குழு தலைவர் ஏழுமலை,கியோர் முன்னிலையில் உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டது இதில் பக்தர்கள் 84 லட்சத்தி 43ஆயிரத்து 994ரூபாய் மற்றும் 136கிராம் தங்கம், 790கிராம் வெள்ளி ஆகியவற்றை காணிக்கையாக செலுத்தியிருந்தனர்.இதில் அறங்காவலர்கள் சுரேஷ், மதியழகன்,பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம், ஆய்வாளர் சங்கீதா,மேலாளர் சதிஷ் கணக்காளர் மணி,உள்ளிட்ட கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டனர் மேல்மலையனூர் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# திருவாரூரில் மதிமுக வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம்



திருவாரூர்,டிச.19-

திருவாரூரில் மதிமு.க வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் தனியார் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.தலைவர் வைகோ வழிகாட்டுதலில்,கழக முதன்மைச் செயலாளர் துரை வைகோவின் கரங்களை வலுப்படுத்தும் வகையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருவாரூர் வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் தனியார் அரங்கில் நடைபெற்றது.மாவட்ட அவைத்தலைவர் ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நகர செயலாளர் சோமா கபிலன் வரவேற்றார். மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கமலவேந்தன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.கழகத்தின் லட்சியங்களையும், அடுத்தகட்டப் பணிகள் குறித்தும் புது உறுப்பினர்கள் சேர்த்தல்,தேர்தல் நிதி மற்றும் கழக வளர்ச்சி நிதி,கழகப் பொதுச் செயலாளர் மக்கள் காவலர் நடைபயண நாயகர் வைகோ சமத்துவர் நடைப்பயணம் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப் பட்டது.மாநில பொருளாளர் செந்தில் அதிபன்,துணை பொதுச்செயலாளர் முருகன்,மாநில கொள்கை விளக்க அணி துணைசெயலாளர் சீனிவாசன், மாவட்ட செயலாளர் சிவவடிவேல்,மாவட்ட பொருளாளர் காமராஜ்,மாவட்ட துணைச் செயலாளர்கள் ராமச்சந்திரன், சரளா,ஸ்டீபன் ராஜ்,கண்ணன், தாமரைச்செல்வம், மணிவண்ணன்,சிவகுரு மற்றும் அனைத்து ஒன்றிய செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள்,பேரூர் கழக செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இறுதியில் ஒன்றிய செயலாளர் தமிழ்வாணன் நன்றி கூறினார்.



**விழுப்புரம் மாவட்டம் மேலகொந்தை ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வனத்துறை இணைந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் புதிய நாற்றங்கால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் பணியினை கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் உதவி செயற்பொறியாளர் நித்யா, உதவி பொறியாளர் குமரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாராயணன், சையத் உட்பட பலர் உள்ளனர்.**




**கடலூர், நகர அரங்கில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டத்தினை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் வரதராஜபெருமாள் உட்பட பலர் உள்ளனர்.**

# தேவனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 147 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

## செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்



செஞ்சி டிச-19,

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் பதினோராம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழுத் தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.பள்ளி தலைமை ஆசிரியர் அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு பதினோராம் வகுப்பு படிக்கும் 147 மாணவ மாணவிகளுக்குத மிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் பொறுப் பேற்றதிலிருந்து கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்.அந்த வகையில் இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை பெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கடுமையான உழைப்பாலும், அறிவுபூர்வமான செயல் திட்டங்களால் இன்றைக்கு தமிழ்நாடு தலை நிமிர்ந்து நின்று எல்லாத் துறைகளிலும் முதன்மை இடம் பெற்று வருவதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருமிதம் தெரிவித்தார்.நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் நாராயணமூர்த்தி , ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,ஒன்றிய கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சக்தி, ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி சக்திவேல்,பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம்,ஒன்றிய நிர்வாகிகள் மன்ன ஏழுமலை, சரவணன்,எஸ்.பி. சம்பத், செந்தில்குமார், ஜி.பி.ஸ். முருகன்,தோப்பு சம்பத்,ஆறுமுகம், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திலகவதி, வளத்தி ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி ஜெயக்குமார்,பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .பள்ளி உதவி தலைமை ஆசிரியர் இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# திருமருகல் அருகே கட்டுமாவடி ஊராட்சியில் பாக நிலை முகவர்கள் கூட்டம்



நாகப்பட்டினம்,டிச.19-

திருமருகல் அருகே கட்டுமாவடி ஊராட்சியில் பாக நிலை முகவர்கள் கூட்டம் வியாழக்கிழமை நடைப்பெற்றது. நாகை சட்டமன்றத் தொகுதி- திருமருகல் வடக்கு ஒன்றியம் கட்டுமாவடி ஊராட்சியில் பாகம்- 18,19,20 என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் வியாழக்கிழமை நடைப்பெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய பொருளாளர் அன்சாரி தலைமையில் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ செங்குட்டுவன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் நாகை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும்,மாநில விவசாய அணி துணை செயலாளருமான பால அருள்செல்வன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார் இக்கூட்டத்தில் பாக நிலை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் பொறியாளர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்க்கும்பணிகள்நடைபெற்றுவருவதைமாவட்டதேர்தல்அலுவலர்வே.சரவணன்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

# கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புகழிமலையில் வசிக்கும் 648 நபர்களுக்கு ரூ.5.98 கோடி மதிப்பீட்டிலான வீட்டு மனைப்பட்டாக்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள்

## எம்.எல்.ஏ. வி.செந்தில்பாலாஜி வழங்கினார்



கரூர்,டிச.19-

கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி , மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், தலைமையில், (18.12.2025) கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புகழிமலையில் வசிக்கும் 648 நபர்களுக்கு ரூ.5.98 கோடி மதிப்பீட்டிலான வீட்டு மனைப் பட்டாக்கள் மற்றும் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி, ரூ. 7.23 கோடி மதிப்பீட்டில் 11 புதிய வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தொடர்ந்து கரூர் மாவட்டத்திற்கு, பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில், இன்றைய தினம் புகழூர் வட்டம், புகழிமலையில் பல ஆண்டுகளாக வசித்து வரும் பொதுமக்கள், நாம் இருக்கக் கூடிய இடத்திற்கு பட்டா கிடைக்குமா கிடைக்காதா என்ற கேள்விக்குறியோடு இருந்த மக்களுக்கு, தான் இருக்கும் இடத்திற்கு இந்த இரண்டு தலைமுறைக்கான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் அதற்கான ஒரு சிறப்பு நேர்வாக தமிழ்நாடு முதலமைச்சருடைய அறிவிப்பிற்கிணங்க பட்டா வழங்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பட்டா வழங்கக்கூடிய இந்த நாள் எனக்கு ஒரு மகிழ்ச்சியான நாளாக, ஒரு திருநாளாக அமைந்திருக்கின்றது. உங்களோடு சேர்ந்து நானும் அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு, நம்முடைய கரூர் மாவட்டத்தில் 28,000 குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஏறத்தாழ 45,000 பயனாளிகளுக்கு அரசினுடைய சார்பில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோல நம்முடைய புகழூர் வட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 3,250 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி அவர்களுக்கான அங்கீகாரத்தைத் தந்திருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு எண்ணிப் பார்த்திட வேண்டும். குறிப்பாக கடந்த காலங்களில் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு நேரில் சென்று மனுக்களைக் கொடுத்து, அந்த மனுக்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்து, வட்டாட்சியர் அதைப் பெற்று சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பி அதை ஆராய்ந்து, அதன் பிறகு உத்தரவைப் பெறுவதற்கான நிலையை மாற்றி, அந்தந்தப் பகுதிகளுக்கே அரசு நிர்வாகம் ஒட்டுமொத்தமாகச் சென்று, தமிழ்நாடு முழுவதும் 10,000 சிறப்பு முகாம்களை 'உங்களோடு ஸ்டாலின்' என்ற ஒரு சிறப்பு வாய்ந்த திட்டத்தை நடத்தி, அதன் மூலமாகப் பெறப்பட்ட மனுக்களுக்கும் தீர்வைத் தந்திருக்கக்கூடியவர் தமிழ்நாடு முதலமைச்சர் .

தமிழ் நாட் டில் இருக்கக்கூடிய மகளிருக்கு அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடிய வகையில் 1 கோடியே 30 லட்சத்து 69 ஆயிரம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையினையும், மேலும் விடுபட்டவர்களுக்கு மீண்டும் முறையீடு செய்யலாம் என்ற அந்த வாய்ப்பையும் தமிழ்நாடு முதலமைச்சர் இப்பொழுது வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த அரசு நிகழ்ச்சியின் மூலமாக ஒரு உறுதியை உங்களுக்குச் சொல்கின்றேன். இந்த நிலங்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று 1967 மற்றும் 87-இல் அரசின் மூலமாகப் பட்டா வழங்கப்பட்ட இடங்கள் ஒன்று, மற்றொன்று அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடங்கள். இதில் 1967 மற்றும் 87 - 67 என்பது மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அந்தப் பட்டாக்களும், 87-ஐப் பொறுத்தவரை UDR செட்டில்மெண்டில் கொடுக்கப்பட்ட பட்டாக்களுக்கும் எந்தவிதமான நமக்குத் தீமையும் ஏற்படாது. அது உடனடியாகப் பத்திரப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு விரைவில் உங்களுக்கு ஒரு நல்ல தீர்வு எட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த வகையில் நாம் அனைவரும் அரசிற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் உறுதுணையாக இருந்திட வேண்டும் என்று அனைவரிடத்திலும் அன்போடு கேட்டுக் கொண்டு, மீண்டும் ஒரு முறை பட்டா உள்ளிட்ட அரசு நலத்திட்டங்களைப் பெறுகின்ற உங்கள் அத்தனை பேருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும் எங்கள் சார்பாகவும் வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் என மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் து றை யின் சார்பாக சிறப்பு வரன்முறைப்பட்டா திட்டத்தின் கீழ் 381 பயனாளிகளுக்கு ரூ.3.81 கோடி மதிப்பீட்டிலான வீட்டுமனைப் பட்டாக்களும், 33 பயனாளிகளுக்கு நத்தம் வரன் மு றைப் பட் டாக்களையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூ.56,500 மதிப்பீட்டிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், 10 பயனாளிகளுக்கு ரூ.65,520 மதிப்பீட்டிலான சலவைப்பெட்டிகளையும், கருணை அடிப்படையில் 1 நபருக்கு பணி நியமன ஆணையினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பாக 1 நபருக்கு ரூ.55,000 மதிப்பீட்டிலான இயற்கை மரண உதவித்தொகையும், 1 நபருக்கு ரூ.20,000 மதிப்பீட்டிலான திருமண உதவித்தொகையும் மற்றும் 1 நபருக்கு ரூ.7,000 மதிப்பீட்டிலான கல்வி உதவித்தொகையும் என மொத்தம் 648 பயனாளிகளுக்கு ரூ.5.98 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில்பாலாஜி வழங்கினார்.

முன்னதாக, கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், தோட்டக்குறிச்சி பள்ளி வாசலுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படவுள்ள பணியினையும், வார்டு-15 சி.எஸ்.ஐ கிறிஸ்துவ தேவாலயத்திற்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூரை அமைக்கும் பணியினையும், புகழூர் நொய்யல் சாலையில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும், வேலாயுதம்பாளையம் பகுதியில் ரூ.62.00 இலட்சம் மதிப்பீட்டில் ரவுண்டானா மற்றும் விளக்குகள் அமைக்கும் பணியினையும், புகழூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 4ல் உள்ள கூலக்கவுண்டனூர் துவக்கப்பள்ளியில் ரூ.51.50 இலட்சம் மதிப்பீட்டிலான 2 வகுப்பறைக் கட்டிடங்களையும், வேலாயுதம்பாளையம் மலைவீதியில் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டிலான வணிக வளாக கட்டிடத்தினையும் மற்றும் காந்தியார் நடுநிலைப் பள்ளியில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டிலான திறன் மிகு வகுப்பறையினையும் திறந்து வைத்தும் என மொத்தம் ரூ. 7.23 கோடி மதிப்பீட்டிலான 11 வளர்ச்சித் திட்டப் பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி திறந்தும், துவக்கியும் வைத்தார்கள். இவ்விழாவில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ச.சிங்காரம், புகழூர் வட்டாட்சியர் பிரபா மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் நடந்த கடன் வழங்கும் முகாமில் 34 பயனாளிகளுக்கு ரூ.1.16 கோடி மதிப்பில் கடனுதவிகள்

## கலெக்டர் ந.மிருணாளினி வழங்கினார்



பெரம்பலூர்,டிச.19-

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் பொதுமக்களுக்கு கடன் வழங்கும் முகாம் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில் நடைபெற்றது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் தொழில் செய்ய விருப்பமுள்ள ஆண்கள், பெண்கள் என அனைத்து தரப்பு மக்களும் சுயதொழில் செய்வதற்கு மாவட்ட தொழில் மையம், மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, கைத்தறி துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தாட்கோ, மீன்வளத்துறை உள்ளிட்ட துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வாயிலாக எளிதில் கடன் பெறும் வகையில், மாவட்ட தொழில் மையம் மூலம் நேரடியாக பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சுயதொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்களுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் 300 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்டனர். மேலும், பல்வேறு திட்டங்களின் மூலம் பயனாளிகளாக தேர்வுசெய்யப்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார். அதன்படி, கலைஞரின் கைவினைத் திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு ரூ.17 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான ஆணைகளையும், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 9 பயனாளிகளுக்கு ரூ30.25 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான ஆணைகளையும்,படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.43.39 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான ஆணைகளையும்,பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ15.65 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான ஆணைகளையும், அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.9.80 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான ஆணை என 34 பயனாளிகளுக்கு ரூ.1.16 கோடி மதிப்பில் கடனுதவிக்கான ஆணைகளை கலெக்டர் ந.மிருணாளினி,இ,ஆப., வழங்கினார்.

மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் நீண்ட காலமாக உரிமை கோராத தொகைக்கு தொடர்புடைய 8 வாடிக்கையாளருக்கு ரூ.9.45 லட்சம் மதிப்பிலான வைப்புத் தொகை நிதி திருப்பி ஒப்படைப்புக்கான ஆணைகளை மாவட்ட அட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் லட்சுமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத், தாட்கோ பொது மேலாளர் கவியரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4. Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## 2026 ஐ.பி.எல். சீசன்:

# சி.எஸ்.கே.வில் புதுமுகங்கள் உள்பட மொத்தம் 25 வீரர்கள்



**சென்னை, டிச. 19-**

10 அணிகள் பங்கேற்கும் 19-வது ஐ.பி.எல். தொடர் அடுத்த ஆண்டு மார்ச் 26-ந் தேதி முதல் மே 31-ந்தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. இதையொட்டி வீரர்களின் மினி ஏலம் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அபுதாபியில் நடந்தது. இதில் 10 அணிகளின் நிர்வாகிகள், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு அணியினரும் தங்களிடம் இருந்த கையிருப்பு தொகைக்கு ஏற்ப குறிப்பிட்ட வீரரை குறி வைத்து பல்வேறு வியூகங்களுடன் வந்திருந்தனர். ஏலத்தை மும்பைச் சேர்ந்த மல்லிகா சாகர் நடத்தினார்.

**ஏலத்தில் 9 வீரர்கள்...**

ஏலத்தில் இந்த முறை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி (சி.எஸ்.கே.) உள்நாட்டு வீரர்களுக்கு குறி வைத்தது. அந்த வகையில் சர்வதேச அனுபவம் இல்லாத உள்நாட்டு வீரர்களான இடக்கை சுழற்பந்து வீசும் ஆல்-ரவுண்டர் பிரஷாந்த் வீர், சிக்சர் அடிப்பதில் வல்லவரான கார்த்திக் சர்மா ஆகியோரை பெரிய தொகைக்கு வாங்கியது. மொத்தத்தில் சென்னை அணி தங்களுக்கு 9 வீரர்களை எடுத்தது. முன்னதாக சென்னை அணி 15 வீரர்களை தக்க வைத்திருந்தது. அதுபோக சஞ்சு சாம்சனை டிரேடிங் முறையில் வாங்கியது. தற்போது ஏலத்தில் 9 வீரர்களை வாங்கியுள்ளது. இதனையும் சேர்த்து சென்னை அணியில் மொத்தம் 25 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

### 25 வீரர்களின் முழு விவரம்:

மகேந்திரசிங் தோனி, ருதுராஜ் கெய்க்வாட் (கேப்டன்), ஆயுஷ் மாத்ரே, டிவால்ட் பிரெவிஸ், உர்வில் படேல், ஷிவம் துபே, ஜேமி ஓவர்டான், ராமகிருஷ்ணா கோஷ், நூர் அகமது, கலீல் அகமது, அன்ஷுல் கம்போஜ், நாதன் எல்லீஸ், ஸ்ரேயாஸ் கோபால், முகேஷ் சவுத்ரி, குர்ஜப்னீத் சிங், சஞ்சு சாம்சன், அகீல் ஹோசைன், பிரஷாந்த் வீர், கார்த்திக் சர்மா, மேத்யூ ஷார்ட், அமன் கான், சர்பராஸ் கான், மேட் ஹென்றி, ராகுல் சஹார் மற்றும் ஜாக் பவுல்க்ஸ்.

## இந்தியா-ஓமன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

# இருதரப்பு உறவுகளுக்கான ஒரு புதிய உத்வேகம்: பிரதமர் மோடி

**மஸ்கட், டிச.19-**

இந்தியா-ஓமன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு புதிய திசையையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையே கடந்த 2023 நவம்பரில் தொடங்கிய தடையற்ற ஒப்பந்தப் பேச்சுவார்த்தை 2025 இல் நிறைவு பெற்றது. இதற்கு முன்பு கடந்த 2006 ஜனவரியில் அமெரிக்காவுடன் ஓமன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்பிறகு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இந்தியாவுடன் அதேபோன்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியா-ஓமன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் நேற்று (டிச. 18) கையெழுத்தானது. இதற்காக மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஓமன் தலைநகர் மஸ்கட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில், ஜோர்டான், எத்தியோப்பியா பயணத்தை முடித்துக் கொண்டும் ஓமன் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா-ஓமன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு புதிய திசையையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்று கூறியுள்ளார்.

இந்தியா-ஓமன் வர்த்தக உச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, இந்த உச்சிமாநாடு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு ஒரு புதிய திசையையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்று அவர் கூறினார். மாண்ட்வி மற்றும் மஸ்கட்டை அரபிக் கடலுக்கு அப்பால் இணைக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கடல்சார் மரபின் வாரிசுகளாக வர்த்தகத் தலைவர்கள் திகழ்கின்றனர் என்றார்.

பருவங்கள் மாறலாம், ஆனால் இந்தியாவிற்கும் ஓமனுக்கும் இடையிலான நட்பு காலப்போக்கில் மேலும் வலுவடைந்து வருகிறது என்று அவர் கூறினார். மேலும், 70 ஆண்டுகால ராஜதந்திர உறவுகளை எடுத்துரைத்த மோடி, இந்தக் கூட்டாண்மை நம்பிக்கை மற்றும் நட்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது பகிரப்பட்ட பாரம்பரியத்தில் வேரூன்றிய வளமான எதிர்காலத்தை எதிர்நோக்குகிறோம் என்றும் கூறினார்.



**முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணாவின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்தார்.**

## ரூ.25.72 கோடியில் திருமண மாளிகை திறப்பு:

# என் வெற்றிக்குப்பின் என் மனைவி உள்ளார்

### கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை, டிச. 18-**

கொளத்தூரில் ரூ.25.72 கோடியில் அண்ணா திருமணமாளிகையை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், என் வெற்றிக்குப்பின் என் மனைவி உள்ளார் என்று அங்கு நடைபெற்ற திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

சென்னை கொளத்தூரில் ரூ.25.72 கோடியில் கட்டப்பட்டுள்ள அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:- அனைவருக்கும் அன்பான வணக்கம். கொளத்தூருக்கு வந்தாலே ஒரு எனர்ஜி வந்துவிடும், உற்சாகம் வந்திடும், ஒரு புத்துணர்ச்சி வந்துவிடும். மணமக்களை வாழ்த்துகிற விழா நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய குடும்பத்தில் ஒரு திருமண நிகழ்வு வந்தால் எப்படி மகிழ்ச்சியுடன் கலந்துகொள்கிறோமோ அதே போல் வந்திருக்கும் அனைவரின் உணர்வுடந்தான் இருக்கிறோம்.

கொளத்தூர் என்று சொன்னாலே சாதனை இல்லையென்றால் ஸ்டாலின் என்ற ஞாபகம் வரும். ஏராளமான திட்டங்களை இந்த தொகுதியில் நிறைவேற்றி இருக்கிறோம். ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதல் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நான் செல்வேன், ஆனால் கொளத்தூருக்கு மட்டும் 10 நாட்களுக்கு ஒரு முறை நான் வந்துவிடுவேன். ஒரு நாள் ஓய்வெடுக்கலாம் என நினைத்தால் சேகர்பாபு என்னை விடமாட்டார். ஒரு பட்டியலை அனுப்பி விடுவார். அதில் 10 விழாக்கள் இருக்கும். அதனை கொடுத்தபின் அந்த நிகழ்ச்சிகளுக்கு நான் வந்தால் தான் எனக்கு முழு திருப்தி இருக்கும்.

என்ன தான் பல மாவட்டங்களில், பல நிகழ்ச்சிகளிலும் தரும் வரவேற்பில் வரும் மகிழ்ச்சியை விட கொளத்தூருக்கு வரும்போது நீங்கள் தரும் வரவேற்புதான் அதிக மகிழ்ச்சி அளிக்கிறது. எப்போதும் உங்கள் வீட்டு பிள்ளையாக குறிப்பாக ஒரு நல்ல பிள்ளையாக இருக்க விரும்புகிறேன். அப்படித்தான் இருக்கிறேன். அமைச்சர்களே பொறாமைப்படும் வகையில் கொளத்தூர் தொகுதியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கொளத்தூர் தொகுதிக்கு எப்போதும் தனிச்சிறப்பு உண்டு. அதிக மாநகராட்சி பள்ளிகள் உள்ளன. அதிக நூலகங்கள், அதிக மருத்துவமனைகள் உள்ள தொகுதி கொளத்தூர்.

கொளத்தூர் மக்கள் அளிக்கும் வரவேற்பில்தான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு ஆணின் வெற்றிக்குப்பின்னால் ஒரு பெண் உள்ளார் என்பதற்கு எத்தனையோ உதாரணம் உள்ளது. பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கணும். என் வெற்றிக்கு காரணம் என் மனைவிதான் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

## ஜூனியர் ஆசிய கோப்பை முதல் அரையிறுதி:

# இந்தியா-இலங்கை இன்று மோதல்

**துபாய், டிச. 19-**

19 வயதுக்குட்பட்டோருக்கான (இளையோர்) 12-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதியில் இந்தியா-இலங்கை மோதுகின்றன.

**லீக் சுற்று நிறைவு....**

19 வயதுக்குட்பட்டோருக்கான (இளையோர்) 12-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி துபாயில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றிருந்த 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று நிறைவடைந்தது. இதன் முடிவில் 'ஏ' பிரிவில் முதல் 2 இடங்களை பிடித்த இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளும், 'பி' பிரிவில் முதல் 2 இடங்களை பிடித்த வங்காளதேசம் மற்றும் இலங்கை அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**முதல் அரையிறுதியில்...**

இந்நிலையில் இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதியில் இந்தியா-இலங்கை மோதுகின்றன. மற்றொரு அரையிறுதியில் வங்காளதேசம்- பாகிஸ்தான் அணிகள் சந்திக்கின்றன. இவ்விரு ஆட்டங்களும் இந்திய நேரப்படி காலை 10.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

## கலைஞர் பல்கலைக்கழக மசோதா:

# ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, டிச. 19-**

கலைஞர் பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

கும்பகோணத்தில் 54.86 ஏக்கரில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்க சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து பல்கலை பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதால், அந்த சட்ட மசோதாவை ஜனாதிபதி முர்முவின் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். இப்பல்கலையின் வேந்தராக, முதல்வர் இருப்பார். இணை வேந்தராக உயர் கல்வித்துறை அமைச்சர் செயல்படுவார். தேடுதல் குழு வாயிலாக, துணைவேந்தர் நியமனம் செய்யப்படுவார். வேந்தரின் அனுமதியின்றி கவுரவ பட்டங்களை வழங்க முடியாது. பல்கலைக்கு மத்திய, மாநில அரசுகள் வாயிலாகவும், பல்கலை மானியக்குழு வாயிலாகவும் நிதி வழங்கப்படும். கட்டணம், மானியம், நன்கொடை, பரிசுகள் வாயிலாக, நிதி ஆதாரங்களை பெறலாம் என சட்டமசோதாவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இந்தநிலையில், கலைஞர் பல்கலைக் கழக மசோதா கடந்த ஏப்ரல் 28-ம் தேதி சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் கவர்னர் ஒப்புதலுக்கு தமிழக அரசு அனுப்பி வைத்தது. தொடர்ந்து கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான மசோதாவை ஜனாதிபதிக்கு கவர்னர் ஆர்.என். ரவி அனுப்பி வைத்தார்.

இந்தநிலையில், கலைஞர் பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார். முன்னதாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, கவர்னரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் மீது உடனடியாக ஒப்புதல் அளிக்கக்கோரி ஜனாதிபதி அலுவலகத்தில் தமிழ்நாடு எம்பிக்கள் மனு அளித்து உள்ளனர். கலைஞர் பல்கலை. மசோதா, விளையாட்டு பல்கலை. மசோதா தொடர்பான முதல்வர் மு.க.ஸ்டாலினின் கடிதத்தை ஜனாதிபதி செயலாளரிடம் 'இண்டியா' கூட்டணி எம்.பி.கள் நேரில் வழங்கினர்.

## பூந்தமல்லி பணிமனையில் இருந்து 125 மின்சார பேருந்துகள் இயக்கம்

### துணை முதல்வர் இன்று துவக்கி வைக்கிறார்

**சென்னை, டிச. 19-**

3-வது கட்டமாக பூந்தமல்லி பணிமனையில் இருந்து ரூ.214.50 கோடி மதிப்பிலான 125 மின்சார பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட உள்ளது. இதனை துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.


டீசலில் இயங்கும் பஸ்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத மின்சார பஸ்களை இயக்கும் நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. அதன்படி சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் 626 மின்சார பேருந்துகள் 5 பணிமனைகளின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் இயக்க முடிவு செய்யப்பட்டது. முதல்கட்டமாக, வியாசர்பாடி பணிமனையில் இருந்து, 120 மின்சார பஸ்களும், 2-வது கட்டமாக, பெரும்பாக்கம் பணிமனையில் இருந்து, 135 மின்சார பஸ்களும் பயன்பாட்டிற்கு வந்து உள்ளன.

இந்த நிலையில் 3-வது கட்டமாக பூந்தமல்லி பணிமனையில் இருந்து ரூ.214.50 கோடி மதிப்பிலான 125 மின்சார பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட உள்ளது. இதனை துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதில் போக்குவரத்து அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப், மாநகர போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் பிரபுசங்கர் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

இந்த 125 மின்சார பஸ்களில் 45 பேருந்துகள் குளிர்சாதன வசதி கொண்டவை. மற்ற 80 பேருந்துகள் சாதாரணமானவை ஆகும். பூந்தமல்லி பணிமனையில் மின்சார பஸ்களை இயக்குவதற்கான கட்டமைப்பு, 25 சார்ஜிங் மையங்கள் மற்றும் பணிமனைகளில் விரிவாக்க பணிகள் ரூ.43.53 கோடி செலவில் முடிந்து உள்ளன. இந்த சீரமைக்கப்பட்ட பணிமனையும் திறக்கப்படுகிறது.

## கடுமையான பனிமூட்டத்தால் போட்டி ரத்து:

# பி.சி.சி.ஐ. மீது ரசிகர்கள் அதிருப்தி



**மும்பை, டிச. 19-**

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையே லக்னோவில் நடைபெற இருந்த 4-வது 20 ஓவர் போட்டி கடும் பனிமூட்டம் காரணமாக ரத்து செய்யப்பட்டதை அடுத்து பி.சி.சிஐ. மீது ரசிகர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

**6 முறை ஆய்வு...**

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையே லக்னோவில் நடைபெற இருந்த 4-வது 20 ஓவர் போட்டி கடும் பனிமூட்டம் காரணமாக ரத்து செய்யப்பட்டது. ஆடுகளத்தை நடுவர்கள் 6 முறை ஆய்வு செய்த பிறகே போட்டியை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் கைவிட்டனர். 7 மணிக்கு இந்த போட்டி தொடங்க வேண்டும். ஆனால் இரவு 9.25 மணி வரை நடுவர்கள் ஆட்டத்தை நடத்த முடியுமா? என்று ஆய்வு செய்தனர்.

**ரசிகர்கள் ஏமாற்றம்...**

கடும் பனியால் போட்டியை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இல்லை என்பதால் அவர்கள் போட்டியை ரத்து செய்தனர். போட்டி கைவிடப்பட்டதால் நீண்ட நேரமாக காத்திருந்த ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். இது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் மீது கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. வட மாநிலங்களில் இந்த நேரத்தில் பனி இருக்கும் என்பதால் போட்டி அட்டவணையை அங்கு அமைத்தது தவறு என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

**தரக் குறியீடு மோசம்...**

காற்றின் தரக் குறியீடு மோசமாக இருந்து வரும் வட மாநிலங்களில் போட்டியை நடத்தியது தவறு என்று ரசிகர்கள் சமூக வலைதளங்களில் விமர்சித்து வருகிறார்கள். இது வெட்கப்பட வேண்டிய விஷயம் என்று அவர்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். இதற்கிடையே பனியால் போட்டியை ரத்து செய்ததற்கு நடுவர்கள் மீது முன்னாள் வீரர் ராபின் உத்தப்பா அதிருப்தி தெரிவித்துள்ளார்.

**மிகவும் சிறந்தது....**

இது தொடர்பாக அவர் கூறியதாவது:- நடுவர்களின் முடிவால் நான் உண்மையில் குழப்பம் அடைந்துள்ளேன். இந்த நிலைமை சீராகப்போவதில்லை. இதைவிட மோசமான சூழ்நிலைகளில் நான் முதல் தர போட்டியில் விளையாடி இருக்கிறேன். அதோடு ஒப்பிடும்போது இந்த சூழ்நிலை மிகவும் சிறந்தது. இவ்வாறு உத்தப்பா கூறியுள்ளார்.

ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டி:

## ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டி:

# ஆஸி. பந்துவீச்சில் இங்கி., திணறல்

**அடிலெய்டு, டிச. 19-**

கம்மின்ஸ், ஸ்காட் போலண்ட், நாதன் லயன் சிறப்பான பந்துவீச்சில் ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டி முதல் இன்னிங்சில் இங்கிலாந்து வீரர்கள் திணறினர்.

**326 ரன்கள் குவிப்பு...**

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3-வது போட்டி அடிலெய்டில் தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் 83 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 326 ரன்கள் அடித்திருந்தது. மிட்செல் ஸ்டார்க் 33 ரன்னுடனும், நாதன் லயன் ரன் ஏதுமின்றியும் களத்தில் இருந்தனர்.விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி 106 ரன்களில் ஆட்டமிழந்தார்.

**இங்கி., தடுமாற்றம்...**

இந்த சூழலில் 2-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 371 ரன்களில் ஆல் அவுட் ஆனது. ஸ்டார்க் 54 ரன்களில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 5 விக்கெட்டுகளை அள்ளினார். இதனையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜாக் கிராலி 9 ரன்களிலும், அடுத்து வந்த போப் 3 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த பென் டக்கெட் 29 ரன்களிலும், ஜோ ரூட் 19 ரன்களிலும் அவுட்டாகினர். ஆஸ்திரேலிய அணியின் சிறப்பான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து திணறியது.

**200 ரன்களை கடந்தது...**

இந்த இக்கட்டான சூழலில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் - ஹாரி புரூக் ஜோடி சேர்ந்து அணியை காப்பாற்ற போராடினர். 56 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. புரூக் 45 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜேமி ஸ்மித் 22 ரன்களிலும், வில் ஜாக்ஸ் 6 ரன்களிலும், பிரைடன் கார்ஸ் ரன் எதுவுமின்றியும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். பின்வரிசையில் களமிறங்கிய ஜோப்ரா ஆர்ச்சர் கேப்டன் ஸ்டோக்சுடன் கை கோர்த்து அணிக்கு வலு சேர்த்தார். இந்த ஜோடி சிறப்பாக ஆடி இங்கிலாந்து அணி 200 ரன்களை கடக்க உதவியது.

இங்கிலாந்து அணி 2-வது நாள் முடிவில் முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகளை இழந்து 213 ரன்கள் அடித்துள்ளது. ஸ்டோக்ஸ் 45 ரன்களுடனும், ஆர்ச்சர் 30 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். சிறப்பாக பந்துவீசிய ஆஸ்திரேலியா தரப்பில் கேப்டன் கம்மின்ஸ் 3 விகெட்டுகளும், ஸ்காட் போலண்ட் மற்றும் நாதன் லயன் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தி உள்ளனர். இங்கிலாந்து இன்னும் 153 ரன்கள் பின்தங்கி உள்ளது. இன்று 3-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

# டாம் லாதம் - கான்வே புதிய வரலாறு




**வெல்லிங்டன், டிச. 19-**

தொடக்க வீரர்கள் டாம் லாதம் மற்றும் டெவோன் கான்வே இணைந்து 323 ரன்கள் குவித்தார்கள். நியூசிலாந்து டெஸ்ட்டில் அதிக ரன்கள் குவித்த தொடக்க வீரர்களாக இவர்கள் வரலாறு படைத்துள்ளார்கள்.

**323 ரன்கள் குவிப்பு....**

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் நியூசிலாந்து அணி வலுவான நிலையில் இருக்கிறது. டாஸ் வென்ற நியூசிலாந்து பேட்டிங்கை தேர்வு செய்து முதல் நாள் முடிவில் 334/1 ரன்கள் எடுத்துள்ளது. தொடக்க வீரர்கள் டாம் லாதம் மற்றும் டெவோன் கான்வே இணைந்து 323 ரன்கள் குவித்தார்கள். நியூசிலாந்து டெஸ்ட்டில் அதிக ரன்கள் குவித்த தொடக்க வீரர்களாக இவர்கள் வரலாறு படைத்துள்ளார்கள்.

**279 பந்துகளில்....**

இதற்கு முன்பாக 1930-இல் ஸ்டீவி டெம்ஸ்டர் - ஜேக்கி மில்ஸ் இணைந்து 276 ரன்கள் குவித்திருந்தார்கள். தற்போது, லாதம் - கான்வே இணை நியூசிலாந்து வரலாற்றில் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள். டாம் லாதம் 137 ரன்களுக்கு கெமர் ரோச் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். நிதானமாக விளையாடிய டெவான் கான்வே 279 பந்துகளில் சிறப்பாக விளையாடி 178 ரன்கள் குவித்துள்ளார். இரண்டாவது இரட்டைச் சதத்தினை நோக்கி நகரும் அவர் தனது அதிகபட்ச டெஸ்ட் ரன்களை அடிக்கவும் வாய்ப்பிருக்கிறது. 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என நியூசிலாந்து முன்னிலை வகிக்கிறது.

## காந்தியின் பெயர் நீக்கத்திற்கு எதிர்ப்பு:

# பார்லி. வளாகத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்




**புதுடெல்லி, டிச. 19-**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயரை திட்டத்தில் இருந்து நீக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே பேரணியாக நடந்து சென்று காங்கிரசின் கார்கே, கேசி வேணுகோபால், பா. சிதம்பரம், தி.மு.. வின் திருச்சி சிவா, கனிமொழி, மற்ற பிற கட்சிகளின் எம்.பிக்கள் கோஷங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயரை மாற்றம் செய்து புதிய விதிகளை அறிமுகம் செய்யும் புதிய மசோதா மீதான விவாதம் நேற்று முன்தினம் மக்களவையில் நடைபெற்றது. மசோதாவின்படி இந்தத் திட்டத்திற்கு விக்சித் பாரத் ரோஜ்கர் மற்றும் ஆஜீவிகா மிஷன் (கிராமின்) என்று பெயரிடப்பட்டுள்ளது. இது சுருக்கமாக விபி-ஜி ராம் ஜி என அழைக்கப்படுகிறது.

மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஷிவ்ராஜ் சிங் சவுகான் நேற்று முன்தினம் மசோதாவைத் தாக்கல் செய்தார். திட்டத்தின் பெயரிலிருந்து மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. நேற்று முன்தினம் மக்களவையில் இந்த மசோதா குறித்து காரசாரமான விவாதம் நடைபெற்றது. நேற்றும் விவாதம் நடைபெற்றது.

இந்நிலையில் நேற்று காலை பாராளுமன்றத்திற்கு வருகை தந்த காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எம்.பிக்கள் மகாத்மா காந்தியின் பெயரை திட்டத்தில் இருந்து நீக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர். பாராளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே பேரணியாக நடந்து சென்று காங்கிரசின் கார்கே, கேசி வேணுகோபால், பா. சிதம்பரம், தி.மு.. வின் திருச்சி சிவா, கனிமொழி, மற்ற பிற கட்சிகளின் எம்.பிக்கள் கோஷங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினர்.



விருதுநகர் ஆட்சியரகத்தில் கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் விருதுநகர் எம்.எல்.ஏ. சீனிவாசன், மேயர் சங்கீதா மற்றும் நகர்மன்ற தலைவர் மாதவன் முன்னிலையில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் அமைச்சர்கள் ராமசந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் தையல் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு மின்மோட்டார் பொருத்தப்பட்ட விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கினர்.





சென்னை சைதாப்போட்டை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் அமைச்சர் சாமிநாதன் மதுரை உலக தமிழ்சங்கம் மற்றும் சென்னை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக நாடகத்துறை இணைந்து நடத்தும் இந்தியத்தமிழ் சங்கங்களின் பணிகளுக்கும், பங்களிப்புகளும் என்ற தேசிய கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். உடன் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அருள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் மாற்று கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்



**ஒட்டன்சத்திரம், டிச. 19-**

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முகாம் அலுவலகத்தில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தபல்வேறு மாற்று கட்சிகளை சேர்ந்தோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

தி.மு.க.வில் இணையும் இந்நிகழ்வின் போது மாவட்ட பொருளாளர் க.வி ஜயன், ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.எஸ்.எம். சேக் சிக்கந்தர் பாட்சா, ஆ.பழனிச் சாமி, பெ.ரத்தினக் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர் கொண்டனர்.

# தேர்தல் பணியில் ஈடுபடும் புகைப்பட கலைஞர்களுக்கு தபால் ஒட்டு வேண்டும்

## புகைப்பட கலைஞர்கள் கோரிக்கை



**கொடைக்கானல், டிச. 19-**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தாலுகா விற்கு உட்பட்ட போட்டோ மற்றும் வீடியோ கிராபர்கள் அமைப்பின் 12-ம் ஆண்டு துவக்கவிழா நடைபெற்றது. விழாவிற்கு முன்னால் நகர் மன்ற தலைவர் டாக்டர் கே சி ஏ குரியன் ஆபிரகாம் தலைமை தாங்கினார். கொடைக்கானல் நகர மன்ற தலைவர் செல்லத்துரை, துணை தலைவர் மாயக்கண்ணன், தொழிலதிபர் பிரவின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழா முடிவில் இந்த அமைப்பின் சார்பில் பல வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தமிழகத்தில் உள்ள சுமார் 2 லட்சம் புகைப்பட கலைஞர்கள் உள்ளனர் இவர்களுக்கு நல வாரியத்தை சிறப்பாக அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழக தேர்தல் ஆணையத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் புகைப்படக் கலைஞர்கள் வாக்கு செலுத்த அரசு பணியாளர்கள் போல தபால் ஓட்டு முறையை அறி விக்கவேண்டும் என்றும் கோரிக்கை நிறைவேற்றப் பட்டது.

முன்னாள் நகர் மன்ற தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். அமைப்பின் தலைவர் ரவிச் சந்திரன் தலைமையில் விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

கொடைக்கானலில் போட்டோகிராபர்கள் மற்றும் வீடியோகிராபர்கள் அமைப்பின் பனிரெண்டாம் ஆண்டு விழா நடந்தது.

# அலங்காநல்லூர் ஐயப்பன் கோவிலில் மார்கழி திருவிழாவை யொட்டி 1008 விளக்கு பூஜை



**அலங்காநல்லூர், டிச. 19-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஆலயத்தில் மார்கழி மாத திருவிழா நடை பெற்றது. இதில் அய்யப்பன் கோவில் முன்பாக முகூர்த்தக் கால் நடும்விழா பட்டர்களின் வேத மந்திரம் முழங்க நடந்தது. அதை தொடர்ந்து கடந்த 16 ந்தேதி மங்கள இசையுடன் பூஜைகள் தொடங்கியது. நேற்று மாலையில் உலக நன்மை வேண்டியும், சாத்தியார் அணை மழை பெய்து நிரம்ப வேண்டியும் 1008 பெண்கள் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜைகள் நடைபெற்றது. முன்னதாக அய்யப்ப சுவாமிக்கு சிறப்பு அபிஷேகமும், மஹா தீபாராதனைகளும் நடந்தது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி சீனிவாசன். மற்றும் முருக , அய்யப்ப பக்தர்கள் செய்திருந்தனர். அலங்காநல்லூர் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## கப்பலூர் டோல்கேட்டில்

# பாஸ்டேக் பிரச்சனையால் தமிழக அரசு பேருந்துகள் நிறுத்தம் - பயணிகள் அவதி



**திருமங்கலம், டிச. 19-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூர் டோல்கேட்டில் பாஸ்டேக் பிரச்சனை காரணமாக அரசுப் பேருந்துகள் தடுத்து நிறுத்தப்படுவதால் பயணிகள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

திருமங்கலம் அருகே நான்கு வழிச்சாலையில் செயல்பட்டு வரும் கப்பலூர் டோல்கேட் விதிகளை மீறி நகராட்சி எல்லைக்கு மிகவும் அருகில் அமைக்கப்பட்டு உள்ளதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றிட வலியுறுத்தி திருமங்கலம் பகுதி மக்கள் தொடர்ந்து பேராடி வருகின்றனர் .இதனால் உள்ளூர் வாகன உரிமை யாளர்களுக்கும் டோல்கேட் ஊழியர்களுக்கும் வாக்குவாத சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கப்பலூர் டோல்கேட் வழியாக நாள்தோறும் சென்று வரும் நூற்றுக்கணக்கான அரசுப் பேருந்துகள் பாஸ்டேக் பிரச்சனை காரணமாக பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றன. குறிப்பாக அரசுப் பேருந்துகளில் உள்ள பாஸ்டேக்கில் இருப்பு குறைந்து விடுவதால் டோல்கேட் ஊழியர்கள் அவற்றை நிறுத்தி பணம் கட்டுமாறு கட்டாயப் படுத்து கின்றனர். ஆனால் பாஸ்டேக் மூலமாக மட்டுமே பணபரிவர்த்தனை செய்திட போக்குவரத்துக் கழக நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது என்பதால் டிக்கெட் வசூல் பணத்தில் டோல் கட்டணம் செலுத்த இயலாத நிலை உள்ளது.

இதனால் அரசுப்பேருந்து பணியாளர்களுக்கும் டோல் கேட் ஊழியர்களுக்கும் இடையிலான வாக்குவாதங்கள் தொடர்கதை யாகி வருகிறது. அப்போது அரசுப் பேருந்துகளை காத்திருக்க வைப்பது, லைன் மாற்றி அனுப்பி விடுவது என டோல்கேட் ஊழியர்கள் அரசுப் பேருந்துகளை காலதாமதம் செய்து வருகின்றனர்.

இதனிடையே பாஸ்டேக் பிரச்சனையால் தடுத்து நிறுத்தப்படும் அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொண்டிடும் பயணிகள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். மேலும் காலதாமதம் காரணமாக டிரிப் கட் ஏற்பட்டு பேருந்துகளின் வசூல் பாதிக்கப்படுவதாக அரசுப் பேருந்துகளின் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் புலம்பி வருகின்றனர்.எனவே இந்த பிரச்சனையை கப்பலூர் டோல்கேட் நிர்வாகமும். அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகமும் பேச்சுவார்த்தை நடத்தி இந்த பாஸ்டேக் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்பதே பயணிகள் உள்ளிட்ட அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

## விருதுநகர் அருகே

# கஞ்சா குடித்த இளைஞர் குறித்து தகவல் தெரிவித்த சிறுவர்கள் மீது தாக்கு

**விருதுநகர், டிச. 19-**

விருதுநகர் அருகே ஒண்டிப்புலி நாயக்கனூர் கிராமத்தில் சில தினங்களுக்கு முன்பு சிறுவர்கள் கஞ்சா பயன்படுத்தியதாகவும், இது குறித்து அதே பகுதியைச் சார்ந்த வேறு சில சிறுவர்கள் வீட்டிற்கு தெரிவித்ததாகவும் இதனால் ஆத்திரமடைந்த சிறுவர்கள் தாங்கள் கஞ்சா பயன்படுத்தியது குறித்து எதற்காக வீட்டில் கூறினாய் என இரண்டு சிறுவர்களை கண்மூடித்தனமாக தாக்கும்

வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. தமிழகத்தில் தற்போது கஞ்சா விற்பனை அதிகரித்து வரும் நிலையில் சிறுவர்கள் கஞ்சா போதைக்கு அடிமையாகி வீட்டிற்கு தெரிவித்த சிறுவர்களை தாக்கும் வீடியோ இணையதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் கொடூரமாக தாக்கிய சிறுவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தாமல் இருதரப்பையும் அழைத்து சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திய காவல்துறையினர்.காவல் துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் காவல்துறை நடந்து கொண்டதாக குற்றம் சாட்டும் சமூக ஆர்வலர்கள் சிறார்கள் மீது கண்மூடித்தனமாக கொலை வெறி தாக்குதல் நடத்திய மற்ற சிறுவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

# 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: முதியவருக்கு 20 ஆண்டுகள் சிறை

**ஸ்ரீவில்லிபுத்தூர், டிச. 19-**

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் ஆசை பாண்டி வயது 67 இவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதைப்பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுகுறித்து சாத்தூர் அனைத்து மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்து ஆசை பாண்டியை கைது செய்தனர். இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட போக் சோ நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி புஷ்பராணி சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவர் ஆசை பாண்டிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார்.



சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் இல்லத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை அருப்புக்கோட்டை ஒன்றிய செயலாளர் யோக.வாசுதேவன் - விருதுநகர் கிழக்கு மாவட்ட இணைச்செயலாளர் ராஜேஸ்வரி வாசுதேவன் தம்பதியரின் மகன் வழிப்பேரனுக்கு துருவன் என்று பெயர் சூட்டி வாழ்த்து தெரிவித்த எடப்பாடி பழனிச்சாமிக்கு குடும்பத்தார் நன்றி தெரிவித்தனர்.



அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் ஆலோசனையின் பேரில் அருப்புக்கோட்டை நகர மகளிர் அணி இணைச்செயலாளர் சித்ரா ஜெய்சங்கர் அ.தி.மு.க. தலைமை கழகத்தில் முன்னாள் அமைச்சர்கள் கோகுல இந்திரா, வைகை செல்வனிடம் விருப்பம் மனு கொடுத்தனர். அருகில் மாவட்ட துணைச்செயலாளர் ராமர், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் ராமநாதன், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் சங்கர் குமார், அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் வீரமாமல்லர் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் ராசப்பன், நெல்சன் உட்பட பலர் உள்ளனர்.



ராஜபாளையத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ராஜபாளையம் வட்ட சட்டப் பணிகள் குழு சார்பில் சாலை விதிகளை கடைபிடித்து நடக்கவும், போக்குவரத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேரணியை ராஜபாளையம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வழியாக முன்பு நடத்தப்பட்ட பேரணியை ராஜபாளையம் வட்ட சட்ட பணிகள் குழு தலைவரும் சார்பு நீதிபதி மான ஷண்முகவேல்ராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார். சார்பு நீதிபதிகள் ராமநாதன் மற்றும் பிரீத்தி பிரசன்னா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேரணியில் போக்குவரத்து காவலர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினர் போலீசார் உள்பட பொதுமக்கள் பலர் பங்கேற்றனர். முன்னதாக சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் கண்ணன், போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் சீமான், வள்ளியம்மாள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ராமநாதபுரம் சாலை பாதுகாப்பு பேரணி மாவட்ட நீதிபதி மெகபூப் அலிகான் தொடங்கி வைத்தார்



**ராமநாதபுரம், டிச. 19-**

ராமநாதபுரத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட நீதிபதி மெகபூப் அலிகான் தொடங்கி வைத்தார்.

ராமநாதபுரம் சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகம் ஆகியவை இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி ஒருங்கிணைந்த கோர்ட் வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட நீதிபதி மெகபூப் அலிகான் பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் விரைவு மகிளா கோர்ட்டு நீதிபதி கவிதா, கூடுதல் மாவட்ட நீதிபதி மோகன்ராம், தலைமை குற்றவியல் நீதிபதி ஜெயசுதாகர், சப் கோர்ட் நீதிபதி மும்தாஜ், சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதிபதி பாஸ்கர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிபதி நிலவேஸ்வரன், மாவட்ட உரிமையியல் நீதிபதி கேத்தரிங் ஜெபா சகுந்தலா மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி சங்கரநாராயணன், போலீசார் வருவாய் துறையினர் போக்குவரத்து ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்த பேரணியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி நீதிமன்ற வளாகத்தில் இருந்து ராமநாதபுரம் பாரதி நகர் வரை சென்றது. பேரணிக்கான ஏற்பாட்டினை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தினர் செய்திருந்தனர்.

## ராஜபாளையத்தில்

# பிரபல ஜவுளி கடையில் பராமரிப்பு பணியின் போது விபத்து: பெண் பலி

**ராஜபாளையம், டிச. 19-**

ராஜபாளையம் காந்தி சிலை ரவுண்டானா பகுதியில் பிரபல ஜவுளி நிறுவனம் ஒன்று உள்ளது. இந்த நிறுவனத்தின் மாடியில் மராமத்து பணிகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில் அந்த கடையில் ஜவுளி வாங்கி இரண்டு பெண்கள் வெளியே வந்த போது எதிர்பாராமல் மாடியிலிருந்து கனமான மேல் பகுதியில் இருந்து ஒரு பொருள் கீழே விழுந்ததில் பெண் மீது விழுந்து அந்த இடத்திலேயே அந்த பெண் பரிதாபமாக உயிரிழந்தார். விசாரணையில் இறந்த பெண் ராஜபாளையம் தாட்கோ காலனியைச் சேர்ந்த மரியம்மாள் வயது 65 என்பது தெரியவந்தது. உடன் சென்ற ஜெனிபர் வயது 35 என்பவருக்கு முகத்திலும் தோள்பட்டையிலும் லேசான காயம் ஏற்பட்டு உயிர் தப்பினார். இது குறித்து ராஜபாளையம் தெற்கு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் 25.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமியை நேற்று சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் இலங்கை துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரக அதிகாரி முனைவர் கணேசநாதன் கேதீஸ்வரன் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பேசினர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, தலைமைச்செயலகத்தில் இலங்கை நாட்டின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய கட்சித் தலைவர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா, ஜனநாயக இலங்கை தமிழ் அரசு கட்சித் தலைவர் கே.வி.தவராசா, தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுதுரை ஐங்கரநேசன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி செய்தித் தொடர்பாளர் கனகரத்தினம் சுகாஷ், தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், கொள்கை பரப்புச் செயலாளர் நடராஜர் காண்டீபன் ஆகியோர் உடனிருந்தனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் 25.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, சென்னை நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை திறந்து வைத்து, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தயாரிப்பு பொருட்களைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதி பாதிப்பு:

# இரு தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் விரைவில் தீர்வு காண வேண்டும்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, டிச. 19-**

அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ள என்றும், இதனால் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது என்றும் பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அமெரிக்க வரி விதிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் விரைவில் களைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடித்தத்தில் வலியுறுத்தியுள்ளார்.

**28 விழுக்காடு அளவு...**

பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது., இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழ்நாட்டின் ஏற்றுமதித் துறைகளில் நெருக்கடிகள் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடைத் துறை ஏற்றுமதியின் அடித்தளமாக விளங்குகிறது என்றும், நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் 28 விழுக்காடு அளவிற்குப் பங்களிப்பினை வழங்குவதுடன், சுமார் 75 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகிறது. இந்தியாவின் தோல் பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதியிலும் 40 விழுக்காடு அளவிற்கு முக்கியப் பங்காற்றி, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

**மாபெரும் சவாலாகும்...**

அமெரிக்க வரிவிதிப்பினால் தற்போது வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள இடர்பாடு என்பது வெறும் பொருளாதாரப் பின்னடைவு மட்டுமல்ல; ஈடுசெய்ய முடியாத சமூக இழப்பினை ஏற்படுத்தும் மாபெரும் சவாலாகும். இந்தியாவின் பின்னலாடைத் தலைநகரமான திருப்பூரில், உறுதிப்படுத்தப்பட்ட ஆர்டர்களில் ஏற்றுமதியாளர்களுக்கு 15,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், நிறுவனங்களில் 30 விழுக்காடு வரை கட்டாய உற்பத்திக் குறைப்பு ஏற்பட்டுள்ளது.

**சரிவின் விளிம்பிற்கு...**

அதோடு, புதிய ஆர்டர்களும் கவலை அடையும் அளவிற்குக் குறைந்து வருகிறது. திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தினமும் 60 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சரிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளன. வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதே போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுகிறது. தற்போது விதிக்கப்பட்டுள்ள இந்த வரியின் காரணமாக, ஏற்றுமதியாளர்கள் லாபத்தினைக் குறைத்து, தங்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பெருமளவில் தள்ளுபடிகளை வழங்கிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர். இது அவர்களின் போட்டித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் குலைக்கும் வகையில் உள்ளது.

**நிச்சயமற்ற தன்மையை....**

இதன் காரணமாக லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளதாகவும், ஏற்கெனவே இந்தத் துறைகள் பணி இழப்புகளையும், ஊதிய ஒத்திவைப்புகளையும் சந்தித்து வருகின்றன என்றும், இது சமூகத்தில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி அச்சுறுத்துவதாகவும் உள்ளது. இந்தச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில், சர்வதேச இறக்குமதியாளர்கள், தங்களது ஆர்டர்களை, வியட்நாம், பங்களாதேஷ் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலுள்ள போட்டியாளர்களிடம், அங்கு வரிவிதிப்பினால் கிடைக்கும் நன்மையைக் கருத்தில் கொண்டு விரைவாக வழங்கி வருகிறது.

**நீண்டகால தாக்கங்களை...**

இதன் காரணமாக, சர்வதேச சந்தை வாய்ப்புகளை இழந்து, மீண்டும் வாய்ப்புகளைத் திரும்பப் பெறுவது என்பது பெருத்த சவாலாக இருக்கும் என்றும், இது நமது இளைஞர்களின், குறிப்பாக பெண்களின் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு அச்சுறுத்தலான, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இந்தச் சூழலில், இந்திய-அமெரிக்க இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கோள்கிறேன்.

**விரைவில் தீர்வு காண...**

விரைவான தீர்வின் மூலமாக நமது ஏற்றுமதியாளர்களின் வணிக நிலையை மீட்டெடுப்பதோடு, உலக அளவில் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்திட இயலும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். எனவே, நிலையான வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதற்கும், உள்நாட்டு தொழில்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கும் பிரதமர் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் மீது நம்பிக்கையுடன் இருப்பதால், அமெரிக்க வரிவிதிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

**மதுரை, டிச. 19-**

திருப்பரங்குன்றம் வழக்கில் ஐகோர்ட் மதுரை கிளை இரு நீதிபதிகள் அமர்வில் கடந்த 5 நாட்கள் நடந்த மேல்முறையீட்டு வழக்கின் விசாரணை நிறைவு பெற்ற நிலையில் தீர்ப்புக்காக தேதி குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்தனர்.

மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பாக தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு சார்பில் மதுரை ஐகோர்ட் டிவிஷன் பெஞ்சில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதில் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள சிக்கந்தர் தர்கா நிர்வாகம், தமிழக வக்பு வாரியம், இந்து முன்னணி உள்ளிட்ட பலர் இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்து இருந்தனர். இந்த மனுக்கள் மீதான விரிவான விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி நேற்றுறு 5-வது நாளாக தொடர்ந்து நடந்தது.

இந்தநிலையில், திருப்பரங்குன்றம் வழக்கில் இரு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் அமர்வில் நடந்த மேல்முறையீட்டு வழக்கின் விசாரணை நேற்று நிறைவு பெற்றது. தனி நீதிபதி விசாரிக்கும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்கு எதிரான மேல்முறையீடு உள்ளிட்ட இது தொடர்பான அனைத்து வழக்குகளும் வரும் ஜனவரி 7-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர். எழுத்துப்பூர்வமான வாதங்களை இன்றைக்குள் வழங்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டு தீர்ப்புக்காக தேதி குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்தனர்.

# புதிய சட்ட முன்வடிவை.... (1-ம் பக்க தொடர்ச்சி)

உள்ளதுடன் மாநிலங்கள் மீது கடுமையான நிதிச்சுமைகளை சுமத்துவதுடன் கூட்டாட்சி தத்துவத்தை அழிக்கும் வண்ணம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் முதல்வர் அவர்கள் இச்சட்ட முன்வடிவு மாநிலங்களின் நிதியையும், நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான ஏழை கிராமப்புறத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாகப் பாதிக்கும் என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டமுன்வடிவு மீதான முக்கிய ஆட்சேபனைகள் தேவை அடிப்படையிலான ஒதுக்கீட்டிலிருந்து விநியோக அடிப்படையிலான ஒதுக்கீட்டிற்கு மாறுதல். இந்த சட்டமுன்வடிவில், மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் மாநிலவாரியான திட்ட ஒதுக்கீடுகளை நிர்ணயிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உள்ளது. இது செலவினங்களுக்கு வரம்பு விதித்து, கூடுதல் செலவுகளை மாநிலங்களே ஏற்க வேண்டும் என்றும் கோருவது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் தேவை அடிப்படையிலான தன்மையிலிருந்து மாறுபடுகிறது. காலநிலை மற்றும் புவியியல் காரணங்களால் தேவை அதிகமாக உள்ள தமிழ்நாட்டில், இத்தகைய நிர்ணயம் (உள்ளூர் தேவைகளைக் கருத்தில் கொள்ளாமல், மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்கிடுவது) வேலை நாட்களையும் கூலியையும் குறைத்து, கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு பெருத்த இன்னல்களை ஏற்படுத்தும். இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் வரைவு வாக்காளர்.... (1-ம் பக்க தொடர்ச்சி)

வெளியாகி உள்ளது.

சென்னையை பொறுத்தவரையில் மொத்தம் உள்ள 40.05 லட்சம் வாக்காளர்களில் 14.26 லட்சம் வாக்காளர் நீக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரையில் மொத்தம் உள்ள 27.87 லட்சம் வாக்காளர்களில் 7.02 லட்சம் வாக்காளர் நீக்கப்பட வாயப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தை பொறுத்தவரையில் மொத்தம் உள்ள 24.45 லட்சம் வாக்காளர்களில் 5.64 லட்சம் வாக்காளர் நீக்கப்பட வாயப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 32 லட்சத்து 25 ஆயிரம் வாக்காளர்களில் 6 லட்சத்து 51 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்படுகின்றனர். திருவள்ளூர் மாவட்டத்தில் 35 லட்சத்து 82 ஆயிரம் வாக்காளர்களில் 6 லட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்படுகின்றனர். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம். வாக்காளர் விண்ணப்ப படிவம் 6-யை பெற்று அதை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். ஜனவரி 18-ம் தேதி வரை ஆட்சேபங்கள் இருந்தால் தெரிவிக்கலாம்.

வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் அல்லது ஏற்கெனவே உள்ள பதிவுகள் குறித்து மறுப்பு தெரிவிக்கலாம். பின்னர், அதுகுறித்த பரிசீலனைகள் நடைபெறும். அதன் பிறகு தகுதியான வாக்காளர்களை பட்டியலில் இடம் பெற செய்வார்கள். இதனைத் தொடர்ந்து இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 17-ம் தேதி வெளியாகும்.

# தமிழகத்தில் டிச. 22-ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்

## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, டிச. 19-**

வரும் 22-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் வரும் 22-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும். 23 மற்றும் 24-ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதனிடையே வரும் 22-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-4 டிகிரி செல்சியஸ் இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும். இன்று தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் (திண்டுக்கல் மாவட்டம்) ஓரிரு இடங்களில் இரவு / அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.